# அம்மையே! அப்பா!!



டாக்டர் மு. வரதராசனார்

சௌரி

அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினுள் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கும்
செம்மையே ஆய சிவபதம் தந்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே தொடர்ந்துனைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே!

# அம்மையே! அப்பா!!

சௌரி

—இந் நூல் என் மகன் செல்வன் S. முத்தன் B.E.க்கும், செல்வி R. அகிலாண்டேஸ்வரி M.Sc.க்கும், 1989, ஜூன் ஐந்தாம் நாள் நடைபெற்ற திருமணத்தில், தமிழ்ப் பெருந்தகை டாக்டர் மு. வ. அவர்களை நினைவு கூர்ந்து வழங்குவது.

# 1. தமிழ்த் தொண்டர் சீர் பரவுவார்!

அலைகள் ஒன்றோடொன்று மோதுகின்றன. ஒன்றுள்ளே ஒன்று மூழ்கி மறைந்து போகின்றன. இப்படித்தான் பேராசிரியர் மு.வ.வின் நினைவலைகள் என்னுள்ளேயே எழுந்து, என்னுள்ளேயே மூழ்கி, என்னுள்ளேயே மோதி, அவ்வப்போது தேங்கிப் போய் விடுகின்றன. அவ்வாறு தேங்கிப்போகின்ற நினைவுகளுக்கு, நெஞ்ச அலைகளுக்கு, வண்ணம் ஒன்று தந்து வாழ்விக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதாவது எழுவது உண்டு. அந்த நினைவுகளிலே கருத்தொருமித்த காதலன்—காதலி அன்பு நெகிழ்ச்சிகளும், ஆசிரிய—மாணவ அறிவு நிகழ்ச்சிகளும், தந்தை—மகன் கட்டுப்பாட்டு உணர்ச்சிகளும், தாய்—பிள்ளை பாச எழுச்சிகளும் நிறைந்து நிலவுகின்றதை இன்றும் உணர்கின்றேன். அந்த உணர்ச்சி உயிருள் கலந்த ஒன்று; பிறவி என ஒன்றிருந்தால் தவறாது தொடரும் ஆற்றலும் ஏற்றமும் உடையது.

இப்படி அவ்வப்போது எழுகின்ற நினைவுகளை, அதாவது, எங்கள் இன்ப துன்ப வாழ்வு நிகழ்ச்சிகளை வெளியிடுவதற்குத் தடையாக இருந்த கருத்துக்கள் இரண்டு.

ஒன்று, ''தனித்தனி மனிதரைத் தலையில் தூக்கி வெறி கொண்டாடல் நெறியாகாது'' என்னும் காந்தீய ஊற்றம்.

இன்னொன்று, ''ஞாலம் நின் புகழே பேசவேண்டும்'' என்று தன்னைப்பற்றி எழுத வருபவர்களிடமெல்லாம் மறுத்துரைத்து ''புகழ்ந்து பேசுதற்கு உரியவன் இறைவன் ஒருவனே; மானுடப் புகழ்ச்சி நாத்திகமாகும். அவ்வாறு

மனிதர்களைப் புகழ்பவர்களே இந்த நூற்றாண்டின் நாத்திகர்கள்'' என்று அறிவுறுத்தி, மறுத்துரைக்கும் மு.வ.வின் உள்ளம்.

இந்த இரண்டும், ஊற்றமும் உள்ளமும் இந்நாள் வரையில் பேராசிரியர் மு.வ. பற்றி ஏதேனும் எழுத நினைக்கும் போதெல்லாம் என்னைத் தடுத்து வந்தன.

பேராசிரியர் பெருந்தகை மறைந்தபின் ஒருநாள், சென்னை செல்லம்மாள் தெருவிற்குச் சென்றிருந்தேன். அப்போது, ''சௌரி, அப்பாவைப் பற்றி—அப்பாவின் ஒழுக்கத்தைப்பற்றி ஓரிருவர் மதுரையில் பழி தூற்றினார்களாம். இத்தனை ஆண்டுகள் உடன் வாழ்ந்த எனக்கு, அப்பாவின் வைராக்கியமும் நெறியான நல்வாழ்வும் தெரியாதா? உனக்குத் தெரியாதா? எந்தப் பெண் தன்னோடு பேசுவதற்குத் தேடி வந்தாலும், என்னை அழைத்து உடன் வைத்துக்கொண்டு பேசி அனுப்புவார் இல்லையா?'' என்று சொல்லி, அம்மா தேம்பித் தேம்பி அழுதார்கள். அந்த அழுகையின் ஆற்றல்தான், 'துறவி மு.வ.' என்னும் மு.வ.பற்றிய என் கட்டுரைக்குக் காரணமாயிற்று.

இன்று என் மூத்தமகன் 'முத்தன்' திருமணம். அவனை அவர் அறிவார். அவனுக்கும் அவரைத் தெரியும். மு.வ. தாத்தா அவன் நெஞ்சில் நிறைந்த சான்றோர்களில் ஒருவர். இதுதான் என் வாழ்நாளில் நிகழும்—அதாவது நான் நிகழ்த்தும் முதல் குடும்ப நிகழ்ச்சி. இதற்கு முன்னும் ஒரு நிகழ்ச்சி 28 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. அப்போது எம். ஏ., முடித்து, திரு. வி.க. பள்ளியில் தமிழ்த் துறைப் பொறுப்பாளனாகப் பதவியேற்றிருந்த காலம். அது, என் திருமண நிகழ்ச்சி. அதற்கு நான் அழைப்பிதழ் அடிக்கவே இல்லை. காந்தீயம் என்னை முற்றும் ஆட்கொண்டிருந்த, மு.வ.வின் சிந்தனைகள் அதற்கு நல்ல ஆதரவு தந்திருந்த காலம் அது. ஆகவே, அவரையும்

அழைக்கவில்லை. அந்த நாளில் எப்படியோ அறிந்து கொண்டு, சிதம்பரம் கீழமூங்கிலடி காந்திக் குடிலில் என்னுடன் ஆதாரக்கல்வி ஆசிரியப் பயிற்சி பெற்ற தில்லை யாடி கணேசன் ஒருவர் மட்டுமே, எப்படியோ செவி வழி அறிந்து, என்னையும் கேட்காமல் அந்தத் திருமணத்தில் கலந்துகொண்டார்.

இன்று நான் காந்தியவாதி யல்லன். மு. வ. வின் கருத்து நெறியிலும் நிற்கவியலாதவன். சுருக்கமாகச் சொன்னால் தனிமனித வாழ்வில் தோற்றுப்போனவன். எளிமையில்லாமல் நிகழும் இந்தத் திருமணத்தில் கலந்து கொண்டு முத்தனை வாழ்த்தியருள 'அப்பா இல்லையே?' என்றதோர் ஏக்கம்—சில நாட்களாக எழலாயிற்று.

இந்த ஏக்க எழுச்சியோடு, பல்கலைக்கழகப் பணி யொன்றை மேற்கொண்டு புதுவை செல்லவிருந்தேன். அதனை முன்னரே அறிந்துகொண்ட நண்பர் க.ப. அறவாணன் அவர்கள், 'தமிழ்த் தொண்டர் சீர் பரவுவார்' என்ற தலைப்பில், மறைந்த பத்துத் தமிழ்ச் சான்றோர் களை, வாழ்கின்ற பத்து தமிழறிஞர்கள் போற்றும் விழா வொன்றினை அன்று மாலை புதுவையில் ஏற்பாடு செய்து, என்னைக் கேளாமலேயே அதற்குத் தலைமை தாங்கும் பொறுப்பை எனக்கு அளித்து, அழைப்பிதழும் அச்சிட்டு அனுப்பிவிட்டார்கள். வேறொரு நிகழ்ச்சியின் பொருட்டு ஏப்ரல் 22ல் அவரும் நானும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் சந்தித்தபோது, 'புதுவை, தமிழ்த் தொண்டர் சீர் பரவுவார் விழாவிற்கு என்னை ஏன் தலைவராகப் போட்டீர்?' என்ற பொருள் படுமாறு பேராசிரியர் அறவாணரை நோக்கினேன். ''ஏப்ரல் 25 மு.வ. பிறந்தநாள். அதனால்தான் உங்களைத் தலைவராகப் போட்டேன்'' என்றார் அவர்தம் அந்த அன்பான வார்த்தைகளை அக நெகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன்,

அப்போது என் மகன் திருமணம் பற்றிப் பேராசிரியர் இராமலிங்கனார்க்கும் அவருக்கும் கூறினேன். க. ப. அறவாணன் அவர்கள், "பேராசிரியர் மு.வ. பற்றிய உங்கள் அனுபவங்களை எழுதித் திருமண விழாவில் எல்லோருக்கும் வழங்கவேண்டும்" என்று ஆர்வத்தோடு கேட்டார். திருமண விழாவிற்கு அழைக்க முடியாதவாறு மு. வ. அப்பாதான் அருவுருவம் பெற்று விட்டாரே! அறவாணர் சொல்வதுபோல் அவர் நினைவுகளையாவது அழைத்து நூலாக்கி, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வழங்கல் வேண்டும் என்ற எண்ணம் அப்போது தோன்றியது. அப்பா அவர்கள், 'மனிதன் வாழவேண்டும், தமிழன் வாழவேண்டும்; வாழ்க்கைச் சிக்கல்கள், பண்டைய சம்பிரதாயங்கள் இவற்றிற்கிடையே தீர்வு கண்டு, தெளிவோடு வாழவேண்டும்' என்று வாழ்வதை, வாழ்விப்பதை ஒரு கொள்கையாகக் கொண்டவர்கள்.

காதலித்து, மணந்து, கலங்கிய கண்களோடு இளைஞர் ஒருவர் வந்தார்.

'ஒத்து வாழ முடியாது' என்று வருந்தத்துடன் கூறி, அப்பாவின் அறிவுரைக்காக நின்றார்.

"இதோ பார், இப்போதெல்லாம் பாஸ் 'மார்க்' உனக்குத் தெரியுமல்லவா? நூற்றுக்கு 35 விழுக்காடு இருந்தாலே வெற்றிதான். நீ விரும்புகின்ற குணங்களில் சில உன் மனைவியிடம் இருக்கும். அப்படியே அவள் விரும்புகின்ற குணங்களில் சில உன்னிடம் இருக்கும். குறைந்தது பத்துக்கு மூன்று குணங்களாவது இருக்குமல்லவா?

"இருவருக்கும் பிடிக்காத மாறுபட்ட குணங்களை கொஞ்சகாலம் மறந்துவிடுங்கள். ஒத்த குணங்களையே எண்ணி எண்ணிப் போற்றி வாருங்கள். நாளடைவில் எல்லாம் சரியாகிவிடும். ஒத்த குணங்கள் பெருகப் பெருக, ஒவ்வாதன வெம்பி விழுந்துவிடும். வாழ

வேண்டும் தம்பி! ஒத்து வாழவேண்டும் தம்பி! ஓரளவு வாழ்க்கைக்காக மனைவியிடம் கணவனும், கணவனிடம் மனைவியும் தோற்றுப்போவதுகூடச் சரிதான். நீ வாழ்வாய்! இன்றிலிருந்து சில நாட்கள் நோன்புபோல உன் மனைவி விரும்புவதையே பேசு, செய்! அப்படியே நீ விரும்பும், மனைவிபால் இருக்கும் சில நல்ல குணங்களைப் பாராட்டு" என்று சொல்லி, வீட்டில் பழுத்திருந்த பேயன் வாழைப் பழங்களைக் கொண்டுவந்து கொடுத்து தின்னச் சொல்லி அவரை அனுப்பி வைத்தார்.

இளங்கோ அடிகளின் 'சிலம்பில், அடிதொறும் அடிதொறும், தமிழன் வாழ்வதற்குதவும் சிந்தனைகள் ஒலிக்கக் காணலாம். அப்படியே மு.வ.வின் படைப்புகளில் இந்தக் காலத் தமிழன் வாழ்வதற்கான, நன்றாக வாழ்வதற்கான வாழ்க்கை வழிகள் ததும்பி நிற்கக் காணலாம்.

காந்தீயக் கொள்கை வெறியனாக அவரிடம் வந்து சேர்ந்தேன். காலப்போக்கில் அவர் தொடர்பு என்னை நெறியனாக உருவாக்கியது. அவர் தொடர்பு எனக்கு வாய்க்காது போயிருப்பின், இல்வாழ்வில் தோற்றுப் பிரிந்து வருந்தியோர் கூட்டங்களில் நானும் ஓர் உறுப்பினனாகி இருப்பேன். அவ்வப்போது அவர் கூறிய தெளிவுரைகளும், எழுதிய கடிதங்களும், பிறர் வாழ்க்கைக்கு பயன்பட்டது போல, அருகிலிருந்த என்னையும் என்னை, அறியாமலேயே வாழ்வித்து வளம் செய்துவிட்டன.

# 2. பாசம்!

பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து ஓரிரு மாதங்கள் தான் ஆகியிருக்கும். ஒரு நாள் நண்பகல் மு.வ.வின் படுக்கையறையில், அவருடைய படுக்கையில் உட்கார்ந்து கொண்டு, அவரோடு ஏதோ பேசிக் கொண்டிருந்தேன். அப்போது, பக்கத்திலிருந்த தன் வீட்டிலிருந்து பேராசிரியர் சீனிவாசன் அண்ணா அவர்கள் மு.வ.வைப் பார்க்க வந்தார்கள். என்னை எதிர்பாராமல் அங்குப் பார்த்து விட்டுத் திகைத்தார்கள். பிறகு, மு.வ.வோடு ஏதோ பேசிவிட்டுப் போய்விட்டார்கள்.

பின் ஒருநாள் என்னைப் பார்த்தபோது, சீனிவாசன் அண்ணா அவர்கள், "பேராசிரியர் மு.வ. அவர்கள் விரைவில் யாரையும் நெருங்கவிட மாட்டார்கள். இரண்டு மாதங்களுக் குள்ளேயே நீ எப்படி நெருக்கமானாய்?" என்று கேட்டார் கள்.

இதனையே நான் இன்றும் கேட்டுக்கொள்கிறேன், எப்படி இவ்வவவு நெருக்கமானேன்? நீண்ட காலத்துக்குப் பிறகு ஒருநாள் இப்படிக் கூறினார்: "கீழே போகிறார் பார் அவர், கதவை அப்படியே திறந்து போட்டுவிட்டு. நீ முதன் முதலில் இந்த வீட்டுக்கு வந்து என்னைப் பார்த்துவிட்டுத் திரும்பிப்போனபோது நான் கவனித்தேன். 'கேட்'டை நன்றாக மூடித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு நீ போனாய். அந்த ஒழுங்கு உன்பால் எனக்கு அன்பு தோற்றுவித்தது" என்றார்.

எனக்கு ஒன்றரை வயதிருக்கும்போது என் தந்தை இறந்துபோனதாகத் தாய் சொல்லக் கேட்டிருக்கிறேன். பல்லாண்டு தந்தையின் அன்பும் கண்டிப்பும் இல்லாமல்

வளர்ந்தேன். இழந்த அந்த இரண்டையும் மு.வ. அவர்கள் அவர்கள்பால் கண்டேன். இதனால் இப்படியொரு பந்தம் ஏற்பட்டிருக்குமா?

1970க்கு முன்னர் மு.வ. அவர்கள் நோய்வாய்ப்பட்டு ஓய்விலிருந்தபோது நான் உடனிருந்தேன். அவர் உண்ணும் போது நானும் உண்பேன். அவர் தாகம் அறிந்து கேளாமலேயே நான் தண்ணீர் கொடுப்பேன். ஒருநாள் நான் தண்ணீர் கொடுத்த சற்றைக்கெல்லாம் அம்மா தண்ணீர் கொண்டுவந்தார்கள்.

''இப்பதான் சௌரி கொடுத்தது'' என்றார். தான் கொடுத்த தண்ணீரைக் குடிக்கவில்லையே என்ற வருத்தத்தோடு அம்மா போய்விட்டார்.

''எனக்குத் தாகம் எடுக்கிறது என்று உனக்கு எப்படித் தெரியும் சௌரி?'' என்று அப்போது அப்பா கேட்டார்.

"நாம் இரண்டுபேரும் ஒன்றாகத்தானே சாப்பிட்டோம். எனக்குத் தாகம் எடுத்தது. அதனால் உங்களுக்கும் தாகம் எடுக்கும் என நினைத்தேன். அதனால்தான் தண்ணீர் கொண்டுவந்தேன்'' என்றேன்.

இப்படித்தான் அவர் இறக்கின்ற அன்று இரவு நானும் நம்பியும் உடனிருந்தோம். நடுயாமத்தில் சிறிது நேரம் நம்பி அவர் படுத்திருந்த அறையைவிட்டு வெளியே சென்றார். ஒருக்கணித்தபடியே நீண்டநேரம் படுத்திருந்த அவருடைய முதுகை மெல்லத் தடவி விட்டேன். 'வேண்டா' என்று கையினால் சைகை செய்தார்கள். ''வலிக்குமே, முதுகைத் தடவிக் கொடுத்தால் வலி குறையுமே'' என்றேன்.

"எனக்கு வலிக்கிறது என்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்றார் அப்பா. ''இழுப்பு (ஆஸ்துமா) நோயினால் நான் பல ஆண்டுகள் உறக்கமின்றி மூச்சுத் திணறலில் மிகவும் துன்புற்றிருக்கிறேன். அப்போதெல்லாம் முதுகுவலியால்

வருந்தியிருக்கிறேன். தாங்களும் ஒரு பக்கமாக பலமணி நேரம் படுத்திருந்தீர்கள்; தங்களுக்கும் வலிக்கும் என்று நினைத்துத்தான் மெல்லக் கழுத்திலிருந்து இடுப்புவரை முதுகைத் தடவிக் கொடுத்தேன்" என்றேன்.

நானறிந்தவரையில் கால் வலி, கை வலி என்று மு. வ. ஒருநாள்கூடக் கூறியதில்லை. யாருடைய உதவியையும் கோரியதில்லை. பல மணி நேரங்கள் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பார். தன் சோர்வை, நோயைத் தண்ணீர் வைத்தியத்தின் மூலமே, உணவு மாற்றத்தின் மூலமே, ஒழுங்கு செய்து கொள்வார்.

நான் யாரோ? அவர் யாரோ? நான் தஞ்சை மாவட்டத்தான். அவர் வடஆர்க்காடு மாவட்டத்துக்காரர். எப்படி இரண்டு மாதத்தில் இந்த பந்தம் வந்தது? எண்ணி எண்ணிப் பார்க்கிறேன்.

நான் காந்திக் குடிலில் ஆசிரியப் பயிற்சி பெற்றவன். பயிற்சியின் போதெல்லாம், ஞாயிறுதோறும் மௌன நோன்பு இருப்பேன். பச்சையப்பனில் சேர்ந்த பிறகுகூட மௌன நோன்பை விடாது பின்பற்றி வந்தேன். அவர்க்கு அது பிடிக்கும்; தானும் ஒருகாலத்தில் பேசா நோன்பு இருந்ததாகக் கூறினார்.

கதர்ச்சட்டை, கதர்வேட்டிதான் அணிந்துகொள்வேன். அவற்றையும் அன்றாடம் துவைத்தே அணிந்துகொள்வேன். வண்ணாருக்குப் போடுவதில்லை. மிக எளிமையாக வாழ்ந்து வந்தேன். இந்த எளிமை காரணமாக இருந்திருக்குமோ?

கிண்டியில் இருந்த சென்ன மல்லீசுவரர் தேவத்தான மாணவர் விடுதியில் சேர்ந்து உணவு, உறைவிட வசதி பெற்றுப் பச்சையப்பனில் பயிலலாம் என்ற நம்பிக்கையோடு சென்னைக்கு வந்தேன். அந்த அறச்சாலையில் இடம்பெற, ஆலாசாபாத்து மாசிலாமணி முதலியார் வேண்டு

கோளுக்கு ஏற்ப, மு. வ. அவர்கள் உதவ முன்வந்தார்கள். என்றாலும், தேவத்தான வரையறைக்குமேல் அதிக வயதினன் அப்போது நான். அதனால் அங்குத் தங்கிப் பயிலும் வாய்ப்பு எனக்கு ஏற்படவில்லை. அதனால் தனிப் பாடம் (Tution) சொல்லிக் கொடுத்து, தனி வீடு ஒன்று பிடித்து, நானே சமைத்துண்டு வாழ்ந்துவரலானேன். இந்த உழைப்பும் உறுதியும் அவர்க்கு என்பால் ஈடுபாட்டை உண்டாக்கியிருக்கக் கூடும்.

இழுப்பு நோயால் (ஆஸ்துமா) அடிக்கடி சென்னை வாழ்க்கையில் துன்புற்றேன். அவரும் நீண்டநாள் இளமை யில் இந்த நோயால் வருந்தியவர்.

இவற்றுள் எந்தக் காரணத்தினாலோ அவர் என்பால் அன்புவைத்து, தன்பால் அழைத்துக்கொண்டார்.

உணவுநேரம் போக, கல்லூரியில் பயிலும் நேரம் போக, மிகுந்த நேரத்தில், தான் படிக்க எழுதத் தன்வீட்டு மாடியில் ஒதுக்கியிருந்த தனியறையை நான் இருக்கக் காலி செய்து கொடுத்தார். அப்படிக் கொடுக்கும்போது 'இரவு ஒன்பது மணிக்குள் வந்துவிடவேண்டும்' என்று ஒரு கட்டளையும் இட்டார். நான் அறிந்தவரை, அவர் இருந்தவரை, அந்தக் கட்டளையை மீறி, அவர் வீட்டுக்குச் சென்ற ஞாபகம் இல்லை.

பச்சையப்பனில் பயின்ற ஐந்து ஆண்டுகளும், எந்த வேலைகள் எங்கிருந்தாலும், இரவு ஒன்பது மணிக்குள்ளாகச் சென்னை செல்லம்மாள் தெருவிலிருந்த அவர் இல்லத்துக்குள் நான் நுழைந்துவிடுவேன்.

# 3. தாயும் ஆனோன்!

"ராதா, சௌரிக்குப் பசி வந்துடும். சாப்பாடு போட்டுடு—என்னோடு பேசிக்கொண்டிருப்பவர் போக நேரமாகும்" என்று, எனக்குச் சிலசமயம் முன்னதாகச் சாப்பாடு போடச் சொல்லிவிடுவார். யாரும் வரவில்லை என்றால், சரியாக ஒரு மணிக்கு எல்லோரும் அமர்ந்து சாப்பிடுவோம். குழம்பில் உப்பு, புளி, உறைப்பு சற்று அதிகமாக இருந்தால், அதில் உள்ள காய்களை மட்டும் நீரிட்டுக் கழுவி உண்பார். அதற்காக நீர்நிறைந்த ஒரு கிண்ணம் மேசையில் வைக்கப்பட்டிருக்கும்.

காலைச் சிற்றுண்டியாக இருந்தால் அரசு, நம்பி, பாரி எல்லாருமாக உண்போம். அம்மா பரிமாறுவார்கள். அல்லது ஓரிருவரோடு உண்பேன். அரசு, நம்பி இருவரும் விரைவாக ஓரிரு தோசைகள் அல்லது இட்டிலிகள் மட்டுமே உண்பர். மருத்துவ நிலையத்துக்குப் புறப்பட நேரமாகிவிடும் என்ற அச்சம்! அவர்களைப் பார்த்து, நானும் ஒன்றிரண்டோடு எழுந்துவிடுவேனோஎன்று எண்ணி, அப்பா தன் கையால் இரண்டு மூன்று தோசைகளை அதிகமாகப் போடுவார். "அவர்கள், இடையே ஏதாவது சிற்றுண்டி சாப்பிடுவார்கள். நீ இனிமேல் என்னோடு நண்பகல்—தானே உண்பாய்—இன்னும் இரண்டு மூன்று தோசை சாப்பிடு" என்று நான் உண்கிறவரை பக்கத்திலிருந்து பேசிக்கொண்டிருப்பார்.

தாயுமானவர் ஆராய்ச்சி முற்றுப்பெறும் நேரம். தாயுமானவர் வாழ்ந்த இடங்களையெல்லாம் அவர் வரலாறு, பாடல் குறிப்புப்படி ஒருமுறை பார்த்து வருவதற் காகத் திருமறைக்காடு, திருச்சிராப்பள்ளி, விராலிமலை முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு, இராமநாதபுரம்,

இராமேசுவரம் செல்லும், வழியில் மதுரைக்குப் போயிருந்தேன். அப்போது அங்கு அவர்கள் துணைவேந்தராக இருந்தார்கள். இரவு தாயுமானவர் பற்றிச் சில பேசினோம். வைகறையில் 4 மணிக்கு எழுந்து ஆகார புவனம் நடத்தினார்கள். காலையில் புல்லூற்றுக்கு அழைத்துச் சென்றார்கள். போகிற வழியில் திடீரென்று காரை நிறுத்தினார்கள். "என்ன அப்பா?" என்றேன். "இங்கே பார் பதநீர் விற்கிறார்கள். உனக்குப் பிடிக்குமே" "ஐயா, இவருக்கு அரை ரூபாய்க்குப் பதநீர் கொடு" என்று சொல்லி வாங்கிக் குடிக்கக் கொடுத்தார்.

பல்லாண்டுகளுக்கு முன் ஒருநாள் அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மாநாடு திருச்சியில் நிகழ்ந்த போது, அப்பா, இந்திப் பேராசிரியர் சங்கரராசு நாயுடு, ராசகோபாலன் இன்னும் சிலர் காவிரி ஆற்றில் குளிக்க போனோம். அப்போது வழியில் நின்று பதநீர் குடித்தேன். ஒரு தாய் தன் பிள்ளைக்குப் பிடித்த பொருளை வாங்கித் தருவதுபோல், அதனை நினைவில் வைத்துக்கொண்டு, மறவாமல் அன்று பதநீர் வாங்கிக் கொடுத்தார் அப்பா.

புல்லூற்றில் அமர்ந்து நீண்ட நேரம் நீராடினோம். அந்தச் சோலைகளில் சிறிது நேரம் இருந்துவிட்டுப் பல்கலைக்கழக வளாகத்திற்கு மீண்டோம். என்னுடன் சிற்றுண்டி அருந்திவிட்டுப் பத்திரிகைகளைப் புரட்டிவிட்டுச் சில முக்கிய கடிதங்களை எழுதும்படி எழுத்தருக்குச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்கள். புறப்படுவதற்குமுன் "சௌரி! இதோ பார், அந்த மேசைமேல் ஒரு கேக் வைத்திருக்கிறேன். அமெரிக்காவில் செய்தது. நான் வரச் சிறிது நேரமாகக் கூடும். பசித்தால் அதில் கொஞ்சம் உண்டு பொறுத்துக்கொள். நான் விரைவில் வர முயல்கிறேன். இருவரும் சேர்ந்து நண்பகல் உண்போம்" என்று சொல்லி, கேக் இருக்கும் இடத்தைக் கையால் சுட்டிக் காட்டிவிட்டுக் கார் ஏறிப் போய்விட்டார்.

நண்பகல் ஒருமணி இருக்கும். 'அப்பா வரவில்லையே' என்று வீட்டுக்கும் வாயிலுக்கும் இடையே கேக்கைத் தின்று கொண்டே நடை பயிலலானேன். யாரோ ஓர் ஆள் வந்தார்.

"துணைவேந்தர் சாப்பிட எப்போது வருவார்?" என்று கேட்டேன். "பெரும்பாலும் வரமாட்டார். அவருக்கு அங்கே தாவர இயல்துறையில் ஒரு விருந்துள்ளது. வெளிநாட்டு அறிஞர் பலர் வந்துள்ளனர். அவர்களோடு விருந்துண்ண வேண்டுமெனத் துணைவேந்தரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்" என்றார்.

"சரி. சாப்பிட்டுவிடலாம். தொலைபேசியில் ஒரு வார்த்தை கேட்டுவிட்டுச் சாப்பிட்டுவிடலாம்" என்று எண்ணித் தொலைபேசி அருகே சென்றபோது, அவர் கார் வந்து வாயிலில் நின்றது. இறங்கி வந்து என் அருகே ஒரு நிமிடம் அமர்ந்து, "சௌரி! இன்று தாவர இயல்துறைக்கு வெளிநாட்டறிஞர் பலர் வந்துள்ளனர். அவர்களைப் பெருமை செய்ய நானும் அவர்களோடு உணவு உண்ண வேண்டும். அந்த வெளிநாட்டார் துறைவளர்ச்சிக்கும் புல்கலை வளர்ச்சிக்கும் பலவகைகளில் உதவக்கூடியவர்கள். ......நீ சாப்பிடு. உன்னிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்"...என்று சொல்லியபடியே காரில் ஏறிப் போய் விட்டார்!

"தொலைபேசியில் பேசி எனக்கு இதனைத் தெரிவித்திருக் கலாமே! நேரில் வந்தா, அருகில் அமர்ந்தா, ஒரு துணைவேந்தர் சொல்ல வேண்டும்?" என எண்ணி, அவர் அன்பை நினைந்து கலங்கினேன்.

## 4. உரியோர்க்கு உதவும் நெறியாளர்!

'சௌரி'! யாராவது நீ அறிந்த மாணவர் சம்பளம் கட்ட, புத்தகம் வாங்க, உணவு உண்ண பணம் இல்லாமல் வருந்தினால்—அவர் நல்லவராக, நேர்மையானவராக, உழைப்பை மதிப்பவராக இருந்தால், எனக்குச் சொல். 'அப்பர் அறக்கட்டளை' என்று ஒன்று இருக்கிறது. அதில் பொறுப்பு ஏற்று நடத்துபவர் எனக்கு மிக வேண்டியவர். பணம் பெற்றுத் தருகிறேன்' என்றார் அப்பா. சிலர்க்கும் அப்படியே உதவினார்.

உதவி வேறு; கடன் வேறு. கடன் என்று வாங்கியோர் திருப்பிக் கொடுக்காவிட்டால் மிகவும் கண்டிப்பார். நான் அறிந்த மாணவர் ஒருவர் கடனாகப் பணம் வாங்கிக் கொண்டு திருப்பித் தரவில்லை. பெரும்பதவி ஏற்று நிறையச் சம்பாதிக்கும் காலத்திலும் திருப்பித் தரவில்லை.

"இதோ பார் 'சௌரி' அவர் சொல்கிறாராம், 'மு.வ.வுக்கு என்ன குறை? இந்தப் பணம் தராவிட்டால் அவருக்கு என்ன குறைந்துவிடப் போகிறது?' என்றாராம். அந்தப் பணம் வந்தால் இன்னும் ஓரிருவர்க்கு உதவலாம். தானும் உதவுகிறவர் இல்லை அவர். அப்படி உதவுகிறவர் வர்களாக இருந்தாலும் விட்டுத் தரலாம்" என்றார்.

ஆனால், உதவி என்று சொன்னால், அவர் யாருக்கு என்ன கொடுத்தார், எவ்வளவு கொடுத்தார், எப்போது கொடுத்தார், எந்த வடிவில் கொடுத்தார் என்று யாருக்கும் தெரியாது. அவர் இறந்தபின், உதவி பெற்ற பலர் அம்மாவை நாடித் திருப்பித்தர முன் வந்தனர். ஆனால், 'அப்பா தந்தது—அவர் உங்களுக்கு உதவியாகத் தந்தது-வேண்டாம். நல்லாயிரு!' என்று அம்மா சொல்லி மறுத்தனுப்பி விட்டார்கள்.

பத்துப் பைசாவையும் அதன் மதிப்புணர்ந்து சிக்கன மாகச் செலவு செய்வார். ஆனால் பத்தாயிரம் ரூபாய்களைக் கல்விக்காகவும் பிற அறக்கட்டளைகளுக் காகவும், தமிழ் மொழிக்காகவும் ஒருவரும் அறியாமல் வழங்குவார்.

என்னை எத்தனையோ முறை எழுதச் சொல்லி யுள்ளார். அவர் கணக்கு எதுவோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் அவருக்காக எழுதிய ஒவ்வோர் எழுத்துக்கும் உரிய பணத்தை எனக்கு நேரிடையாகவோ மறைமுக மாகவோ தந்துவிடுவார்.

இறுதி ஆண்டு ஆனர்சு வகுப்பு. காலையும் மாலையும் தனிப்பாடம் (டியூசன்) நடத்த ஒய்வில்லாமல் ஓடிக்கொண் டிருந்தேன். ஒருநாள் காலையில் தோட்டத்தைச் சுற்றித் தென்னை மரங்களைப் பார்த்துக்கொண்டு வந்தோம்.

''சௌரி'! உனக்குத் தனிப்பாடம் சொல்லித் தருவதில் எவ்வளவு வரும்? அதை இந்த ஆண்டுக்கு நான் தந்து விடுகிறேன். இந்த ஆண்டு இறுதி ஆண்டு. நிறையப் படிக்க வேண்டும். முதல் வகுப்பில் சிறப்பாக வெற்றி பெற வேண்டும். தனிப்பாடம் சொல்வதை நிறுத்திவிட்டுநன்றாகப் படி, என்று கூறித் தன் அறைக்குப்போய் 'இந்தக் கட்டுத் தாள்களை எடுத்துக்கொள். பகலில் படி; இரவில் சிந்தித்துக் குறிப்பு வைத்துக்கொள். காலையில் எழுந்தவுடன் எழுது. இப்படிப் படித்தால் நல்ல வெற்றி பெறலாம்'' என்று கூறி உதவினார்.

இம்மியும் பிறர் உழைப்பைச் சுரண்டாதவர். தன் உழைப்பையும் வீண் செய்யாதவர்; வீணர்களுக்குத் தராதவர்.

# 5. வீடு கட்ட வித்திட்டவர்!

1965க்கு முன் என்று நினைக்கிறேன். ஒரு நாள் அப்பாவிடமிருந்து, ஞாயிற்றுக்கிழமை பெங்களூர்க்கு வருமாறு, கடிதம் வந்தது. அப்போது ஆந்திர மாநிலச் சித்தூர் அரசினர் கல்லூரியில் தமிழ்த் துறையில் இருந்தேன். உடனே புறப்பட்டுப் பெங்களூர்க்குப் போனேன். ''உன் நூல் 'கட்டுரை மணிகள்' பல்கலைக் கழகத்தில் பாடமாக வைத்தோம். ஆனால் பேராசிரியர் ஒருவர் குறுக்கிட்டுக் கெடுத்துவிட்டார். இந்த ஆண்டு வைத்த பாடநூல்களுக்குப் பதிலாகப் பல்கலைக்கழகமே பதிப்பிக்கப் போகிறது. நீ வீடு கட்ட அந்தப் பணம் உதவும் என எண்ணினேன். மனை ஏதேனும் வாங்கினாயா? சித்தூரில் பணி உறுதியாகி விட்டதல்லவா? எப்போது வீடுகட்டப் போகிறாய்?'' என்று கேட்டார்.

“இப்போது வீடுகட்டும் எண்ணம் ஒன்றும் இல்லை. அப்புறம் பார்க்கலாம் என்றிருக்கிறேன்'' என்றேன்.

''உனக்குத் தெரியாது. மனை விலை வேகமாக ஏறி விடும். இப்போதே கல்லூரிக்கு அருகில் மனை ஒன்று வாங்கி விடு'' என்று சொல்லி, பரீட்சைத்தாள் வருகின்ற ஒரு துணிப்பை முடிச்சை எடுத்து எனக்குக் கொடுத்தார்.

நான் வியப்போடு அவர்கள் முகத்தைப் பார்த்தேன்.

''இதில் மூவாயிரம் ரூபாய் இருக்கிறது. உடனே மனை ஒன்று வாங்கிவிடு. அப்படி இப்படியென்று செலவழித்து விடாதே''—என்று என்முன் அந்தப் பையை வைத்தார்.

''நான் சம்பாதித்துப் பணம் சேர்த்து வாங்கிக் கொள்கிறேன், அப்பா!'' என்று சொல்லிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளத் தயங்கினேன்.

"நீ சம்பாதித்துப் பணம் சேர்த்து மனை வாங்கு வதற்குள் எல்லா மனையும் விற்றுப் போய்விடும்; விலையும் ஏறிப் போய்விடும். உன்னால் சேர்க்கவும் முடியாது; மனை வாங்கவும் முடியாது. இந்தப் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாம். ஐந்து பத்து ரூபாயாகக்கூடக் கொடுக்கலாம்" என்று சொல்லிப் பணத்தை எடுத்துக்கொள்ளச் சொன்னார்கள். உடனே சித்தூர் சென்று மனை வாங்கச் சொன்னார்கள்.

அப்பாவின் குணம் எனக்குத் தெரியும். கடனாக எந்தத் தொகை வாங்கினாலும், முறைப்படி ஒரு தாளில் 'ரெவின்யூ முத்திரை' ஒன்றை ஒட்டிக் கடன் தொகை எழுதி, கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட வேண்டும். அப்படியே மூவாயிரம் ரூபாய்க்கு ஒரு பத்திரம் எழுதிக் கொடுத்தேன்.

"நீ அவ்வப்போது கொடுப்பதை நீயே கணக்கு வைத்துக்கொள். மூவாயிரம் கொடுத்த பிறகு, இந்தச் சீட்டைக் கேட்டு வாங்கிக் கிழித்து எறிந்துவிடு" என்று சொன்னார்.

அதன் பிறகு, அவ்வப்போது புத்தகத்தில் வரும் பணத்தில் சிறிது சிறிது கொடுப்பேன். ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபாய் வரையில் கொடுத்தேன்.

1968 என்று நினைக்கிறேன். அவர் உடல்நலம் கெட்டுப் பதினைந்து நாட்கள் படுத்த படுக்கையிலே இருந்தார். இதயநோய் என்று மருத்துவர்கள் கூறி, ஓய்விருக்கச் சொன்ன காலம் அது.

இந்தச் செய்தி அறிந்து, சித்தூரிலிருந்து நான் சென்னை போய்ச் சேர்ந்தேன். சென்றவுடனேயே, யாரு மில்லாத நேரத்தில் என்னைப் பார்த்து "அந்தப் பற்றுச் சீட்டை நேற்று கிழித்து எறிந்துவிட்டேன். நீ வருவதற்கு முன் எனக்கு ஏதேனும் நேர்ந்திடுமோ என்று, அதைக் கிழித்து எறிந்து விட்டேன்" என்றார்.

எனக்கு மட்டும் அல்ல. தமிழாசிரியர் யாரும் வீடில்லாமல் தவித்து வருந்தக் கூடாது என்பதை ஒரு கொள்கையாக வைத்திருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியர் நூல்களையே பாடநூலாக வைத்து உதவுவதை ஒரு குறிக்கோளாகக் கொண்டிருந் தார். தாம் சென்னைக்கு வரும் முன் வீடில்லாமல் துன்புற்றதும், வாடகை வீடு தருவதாகச் சொல்லிப் பல இடங்களில் ஏமாற்றப்பட்டதும், இந்தக் கொள்கைக்கு அடிப்படையாக இருந்திருக்கலாம், தாம் பெற்ற துன்பம் பிறர் உறாமல் வேண்டும் என்ற அருள் நெஞ்சமும் காரணம் எனலாம்!

அண்மையில், பேராசிரியர் மு.வ. பற்றிச் சி.பா. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவில், தன் மாணவர்கள் எல்லாம் வீடுகட்டிக் கொள்ள மு.வ. செய்த உதவிகள் பற்றிக் குறிப்பிட்டதாகச் சிலம்பொலி செல்லப்பனார் என்னிடம் சொல்லிவிட்டு, "எனக்கு இப்படியொரு பேராசிரியர் வாய்க்கவில்லையே! இத்தனை ஆண்டுகள் சென்னையில் வாழ்ந்து ஒரு வீடும் கட்டிக்கொள்ள முடியாமல் வாழ்ந்து விட்டேனே!' என்று கூறி வருந்திய போது, மு.வ.வின் அன்பு உள்ளம், அறச்செயல், உள்ளங்கை நெல்லிக்கனி போல் எனக்கு விளங்கியது.

# 6. காசில் நேசமிலை என்னும் கண்டிப்பு நிலை

''என்ன செளரி! உன்னை ஆந்திரத்திற்கு அனுப்பி விட்டேன். பாலசுப்பிரமணியம் மற்றவர்களையெல்லாம் பக்கத்திலேயே வைத்துக்கொண்டேன்' என்று அம்மா என்னைக் குறை சொல்லிக் கொண்டேயிருக்கிறாள். உனக்குத் தமிழ்நாட்டுக்கு வர எண்ணம் இருக்கிறதா? ஏதேனும் விளம்பரம் வந்தால் விண்ணப்பம் செய். என்னால் முடிந்த வரையில் முயல்வேன். உனக்குத் தமிழ் நாட்டில் வேலை வாங்கிக் கொடுத்தால்தான், அம்மா குறை சொல்வது நிற்கும்" என்று ஒரு நாள் கூறினார்.

அவர் கூறிய சில நாட்களுக்குப் பின்னர் தமிழ்நாடு தேர்வாணையம், அரசினர் கல்லூரிகளுக்குத்தமிழாசிரியர் தேவை என விளம்பரம் தந்தது; விண்ணப்பித்தேன். விண்ணப்பித்த பிறகு, அவரை நேரில் சந்தித்தபோது, விண்ணப்பித்த செய்தியைக் கூறினேன்.

''அரசு கல்லூரியில் சேர்ந்துவிட்டால், நூல் வெளியிட முடியாது. அவ்வப்போது நீ எழுதிய கட்டுரைகளை யெல்லாம் வீட்டில் தொகுத்து வை. அடுத்த வாரம் சனிக்கிழமை சித்தூர் வழியாகப் பெங்களூர்க்குப் போகிறேன். வழியில் இரவு எட்டு அல்லது ஒன்பது மணிக்கு உன் வீட்டுக்கு வருவேன். பெரும்பாலும் பாரி செல்லப்பனாரும் ஆடிட்டர் சத்தியமூர்த்தியும் உடன் வருவார்கள். நீ கட்டிக்கொண்டிருக்கிற வீட்டில் இரவு தங்கிவிட்டுப் புறப்படுவோம். அப்போது கட்டுரைகளை யும் எடுத்துக்கொண்டு போவேன். தயாராக வைத்திரு'' என்று சொன்னார்.

அவர் சொன்னபடியே பதினொரு கட்டுரைகளைத் தொகுத்து வைத்திருந்தேன். சொன்னபடி அன்று இரவே வந்து சேர்ந்தார்கள், நான் தூங்கிவிட்டேன். கதவைத் தட்டியெழுப்பி, என்னொடு அரைகுறையாகக் கட்டிக் கொண்டிருந்த அந்த வீட்டு மண்தரையிலே படுத்துக் கொண்டனர். காலை 4 மணியளவில் கட்டுரைகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டுப் போய்விட்டனர்.

இரண்டு மூன்று வாரங்களில் கட்டுரைகளின் அச்சுப் படிவங்கள் முறையாக வர ஆரம்பித்தன. ஒவ்வோர் அச்சுப்படியையும் முதலில் தான் திருத்தி, அதனுடன் என் குறைகளையெல்லாம் சுட்டி, ஒரு கடிதம் ஒன்று எழுதி இணைத்து, அவர் அனுப்புவார்.

'இன்பத்தில் தோய்ந்த எண்ணங்கள்' என்னும் கட்டுரையில் ஓரிரு தொடர்கள் பாலுணர்வு பற்றி இருந்தன. அவற்றை நீக்கிவிட்டு, 'மாணவர்களுக்குப் பயன்படும் நூல்களில் இத்தகைய தொடர்கள் அமைதல் வேண்டா' என்ற குறிப்போடு அனுப்பி வைத்தார். இப்படி ஒவ்வோர் அச்சுப் படிவத்தையும், கட்டுரைகளின் உள்ளடக்கம், வடிவம் ஆகியவற்றைத் திருத்தி, திருத்தத்திற்கான காரணங்களையும் சுட்டி எழுதினார்கள்.

அந்த நூலுக்குக் 'கட்டுரை மணிகள்' என்று பெயரிட்டு, பாரி செல்லப்பனாரிடம் விற்பனை உரிமை கொடுத்து வெளியிட்டார்.

அவர் வாழ்ந்த காலத்து, இந்திய பல்கலைக் கழகங்களில் மதுரை தவிர வேறு பல்கலைக் கழகங்களிலும், பிற தமிழ் வகுப்புகளிலும் அந்த நூல் பாடநூலாக வைப்பதற்குரிய உதவிகள் எல்லாம், எனக்குத் தெரியாமலேயே செய்தார்.

ஒருநாள் நான் பாரி நிலையத்தில் இருந்தேன். ஏதோ காரணமாகப் பாரி செல்லப்பாவை மு.வ. அவர்கள்

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்கள். அப்போது செல்லப்பனார் அருகிலிருந்த நானும் பேசினேன். குரலைக் கடுமையாக்கிக் கொண்டு, 'கட்டுரை மணிகள்' முதற் பதிப்பு எல்லாம் விற்பனையாகி விட்டதல்லவா? அது அச்சிட்ட செலவு என் பற்றில் உள்ளது என்பது தெரியும் அல்லவா? ஏன் இன்னும் சரி செய்யவில்லை?'' என்றார்.

''உங்களால் வெளியான நூல்; உங்களால் விற்பனை யான நூல்; நீங்களே எடுத்துக் கொள்வீர்கள் என்று இருந்துவிட்டேன் அப்பா!'' என்று வருத்தத்தோடு கூறினேன்.

''நானாக எப்படி எடுத்துக்கொள்வேன்? வேண்டு மானால் கொடுப்பேன். நீயாக அல்லவா திருப்பித் தர வேண்டும்!'' என்றார்.

''சரி அப்பா. இப்போதே இங்கே சொல்லித் தங்கள் பற்றில் சேர்த்துவிடுகிறேன்'' என்றேன்.

''அதுசரி, நான் சொல்லுகிற முகவரியை எழுதிக்கொள். அவர்களிடம் போய் விண்ணப்பம் ஒன்று பெற்று, கட்டுரை மணிகள் ஆறு நூல்களைக் கொடு. உனக்கு முந்நூறு ரூபாய் கிடைக்கும்'' என்று, சி. எல். ஐ. எஸ். முகவரி தந்தார்கள்.

# 7. ஆய்வு—வாழ்க்கை வழிகாட்டி!

1970ல் ஆந்திர மாநிலம் சித்தூரில் ஆசிரியனாக இருந்த காலம். 'முனைவர் பட்ட ஆய்வு எந்தத் தலைப்பில் செய்யலாம்' என்று கேட்க மு. வ. விடம் போயிருந்தேன். 'கள்ளிமலர்' என்ற என் புதினம் வெளிவந்த நேரம் அது. சில சிறுகதைகளும் எழுதியிருந்தேன். எனவே, "படைப்பிலக்கியம் பற்றி, புதினம் பற்றி ஆய்வு செய்யலாமா?" என்று கேட்டேன்.

'வேண்டா! தாயுமானவர் பற்றிச் செய்' என்று சொல்லி நிறுத்தினார். அவர் யாருக்கும் அறிவுரை சொல்ல மாட்டார். முடிவும் சொல்ல மாட்டார். நாமே சிந்தித்து முடிவெடுக்க விட்டு விடுவார்.

தொடர்ந்து சொன்னார்: "முனைவர் பட்ட ஆய்வு கல்வித்துறையில் ஒரு நிறை ஆய்வு. அதற்குமேல் வேறு பட்டம் இல்லை. அதற்காக ஒருவர் பல்லாண்டுகள் உழைக்க வேண்டும். சிலர்க்கு உடல்நலம் கெடுவது உண்டு. சிலருடைய வழிகாட்டி மனநலம் கெட்டுத் தொடர்ந்து வழிகாட்ட மறுத்து விடுவதும் உண்டு. இருவரும் ஒத்துழைத்து ஆய்வேடு அளித்தபின் திருத்துவோர் முடிவு எப்படி இருக்குமோ? அதனால்தான் சொல்கிறேன். பட்டம் வருகிறதோ வரவில்லையோ படிப்பு வாழ்வுக்குத் துணைசெய்வதாக மனநிறைவு தரவேண்டும். 'பல்லாண்டுகள் வீணாகப் போய் விட்டதே' என்று பின்னர் வருந்தக் கூடாது" என்று சொல்லி, மாடிக்கு அழைத்துப் போய் அங்கிருந்த புத்தகங்களில் தான் அவ்வப்போது படித்துக் குறிப்பு எழுதி வைத்துள்ள தாயுமானவர் புத்தகம் ஒன்றையும், உரிய பார்வை நூல்கள் சிலவற்றையும் எடுத்து எனக்கு அளித்தார்.

பெரும்பாலும் அவர்கள் படித்த நூல்களைப் பெற்றுத் தான் நான் முதுகலையும் பயின்றேன். அந்த நூல்களில்

'யாப்பருங்கலக் காரிகை' ஒன்று. அதில் அடிக்குறிப்பு இல்லாத பல பாடல்களுக்கு அரிதின் முயன்று கண்டு அடிக்குறிப்பு எழுதி வைத்திருந்தார்கள். அப்போதிருந்த பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர் ஒருவர் வகுப்பில் அதனைப் பார்த்து விட்டார். திரும்பத் தருவதாகக் கூறி எடுத்துக் கொண்டார். பிறகு திருப்பித் தரவே இல்லை. இது பற்றிக் குறிப்பிட்டுவிட்டுப் பிற நூல்களைத் திருப்பித் தந்து விட்டேன். அவர் வித்துவானுக்குப் படித்தபோது வைத்திருந்த தொல்காப்பிய கையடக்கப் பதிப்பு ஒன்று மட்டும் இப்போது என்னிடம் உள்ளது.

அவர் படித்த நூல்கள் ஒவ்வொன்றிலும் சில குறிப்புகள் எழுதிவைப்பது அவர் வழக்கம். அவற்றில் மூன்று குறியீடுகள் குறிப்பிடத்தக்கன. ஒன்று ஒரு சரி குறியீடு; இன்னொன்று இரண்டு சரி குறியீடு; மூன்றாவது வினாக்குறி. ஒரு சரிக் குறியீடு இட்டிருந்தால் நல்ல சிந்தனை, ஏற்கத்தக்க கருத்து என்று பொருள். இரண்டு சரிக்குறியீடுகள் இட்டிருந்தால் மீண்டும் மீண்டும் படிக்கவேண்டும் என்பது பொருள்; வினாக்குறி இட்டிருந்தால் எண்ணிப்பார்த்து ஏற்கவோ, மறுக்கவோ வேண்டும் என்பது பொருள்.

"படிக்கும்போது மீண்டும் படிக்க வேண்டுவன என்ற ஆர்வத்தால் சில நூல்களைத் தேர்ந்தெடுத்து வைத்துள்ளேன். சில நூல்களில் சில குறிப்புகள், குறியீடுகள் எழுதியுள்ளேன். ஆனால் ஒருமுறைகூட அவற்றை மீண்டும் எடுத்துப் படிக்க முடியவில்லை: ஓய்வில்லை. புதிய புதிய நூல்கள் பல கற்க வேண்டியுள்ளது. இந்த ஆராய்ச்சித் துறைக்கு வந்து, முனைவர் பட்ட மேற்பார்வையாளராய் இருப்பதால், எது எதையோ படிக்க வேண்டியுள்ளது. ஆய்வாளர்க்காகப் பல படிக்க வேண்டியுள்ளன" என்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது கூறினார்கள் அப்பா,

# 8. எழுத்தாளர் மு. வ!

இந்த நூற்றாண்டுக் கட்டுரை ஆசிரியர்களில் தலையாயவர் அவர். அவர் கருத்துகளைச் சொல்லச் சொல்ல எழுதுவது ஓர் இன்பம். தென்றல் காற்றுபோல் சிந்தனை அலைகள் மெல்ல மெல்ல மொழி உருப்பெறும் காட்சி மிக இனிமையானது.

'சௌரி! இன்றைக்குச் சீக்கிரமே வந்துவிடு. எழுத வேண்டும்' என்பார். கையில் யாரோ அனுப்பிய விழா அழைப்பிதழ் அட்டை ஒன்று இருக்கும். அதன் பின்னர்ச் சில குறிப்புகள் காணப் பெறும். அதைக் கையில் வைத்துக் கொண்டு, அங்கும் இங்கும் உலாவியபடியே சொல்லிக் கொண்டு போவார். மறித்து எதுவும் கேட்கக் கூடாது. நெய்யொழுக்குப்போல் அறாமல் எழுதிக்கொண்டே இருக்கவேண்டும். அவரும் ஒரு நாள்கூட "நான் என்ன சொன்னேன்? எங்கே அந்தத் தொடரைப் படி? அதன் எழுவாய் என்ன?" இப்படி எதுவுமே கேளாமல், தொடர்ந்த சிந்தனையோடு கூறுவார்.

சில சமயம், 'வருகிறார்' 'போகிறார்' என்று அவர் கூறிய சொற்களுக்கு ஈடாக, 'வருகின்றார்' 'போகின்றார்' என்று எழுதிவிடுவேன். மெல்லக் கடிந்து கொள்வார்.

"'வருகிறார்' என ஐந்து எழுத்தில் சொல்லிவிடக்கூடிய கருத்தை 'வருகின்றார்' என இன்னும் ஓர் எழுத்துக் கூட்டி ஆறு எழுத்துகளில் ஏன் கூறவேண்டும்? ஒரு கட்டுரையில் இத்தகு வினைமுற்றுகள் நூறு வந்தால் நூறு எழுத்துக்கள் மிகும் அல்லவா? அச்சுக் கோர்ப்பவருக்கு வேலை மிகும்; அச்சிடுகின்ற தாளும் அதிகம் ஆகும்." இப்படிச் சொல்லி மெல்ல மெல்ல என்னையும் அறியாமல் என் மொழி, நடையை எளிமை ஆக்கினார்,

காந்தீயத் தாக்கம் அவர் உடையில், உணவில் உணர்வில் மட்டும் அல்ல; எழுதுகின்ற எழுத்துகளிலும் பயன்படுத்துகின்ற சொற்களிலும், அமைக்கின்ற தொடர்களிலும் எல்லாம் அமைந்திருந்தது.

1949-50 நாகை தேசிய உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பு (S.S. L. C) பயின்று கொண்டிருந்த காலம். தமிழ்ப் புலவர் சின்னப்பா அவர்கள், மு. வ. வின் 'அன்னைக்கு' என்ற கடிதம் ஒன்றைப் பாடமாக நடத்திக் கொண்டிருந்தார். எங்களை மறந்து பாடம் கேட்டுக்கொண்டிருந்தோம்.

"அடடா! என்ன இப்படி எழுதிவிட்டார்?" என்று படித்துக் கொண்டிருந்த தமிழாசிரியர் பாடத்தை நிறுத்தி விட்டு, இடையில் பேசினார். அதைக் கேட்டுத் தலை நிமிர்ந்தோம்.

'இதோ! பாருங்கள் என்ன அழகான நடை; என்ன இனிய சொற்கள்; என்ன உணர்ச்சி! ஆனால் இடையிலே 'அப்படி', 'இப்படி' என்று இந்தச் சொற்களைப் போட்டு விட்டாரே. 'அவ்வாறு', 'இவ்வாறு' என்று எழுதியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்' என்று கூறினார். மு.வ-வுக்கு அப்படி எழுதத் தெரியவில்லை என்று எண்ணிக் கொண்டோம்.

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு இன்று புரிகிறது. ஏழை எளியவர் மொழியில் அவர்களுக்கு எல்லாம் விளங்குமாறு எளிமையாக எழுத, பேச முயன்ற காந்தீயத் தாக்கம் அவர் நடையில் செய்த மாற்றம்-இன்று 'எனக்குப் புரிகிறது. அன்று 'எங்கள் தமிழாசிரியர் சொன்னதே சரி. மு.வ. இப்படி எழுதிவிட்டாரே' என்று, மற்றவர்களோடு சேர்ந்து நானும் தவறாகக் கருதினேன்.

'வாடா மலர்' புதினம் பெங்களூரில் எழுதப் பெற்றது. மாலையில் தொடங்கி இரவு நெடுநேரம் சொல்லிக் கொண்டே இருப்பார், பெரும்பாலும் அவர் படுத்துக்

கொண்டு கண்களை மூடியபடியே அலை அலையாய்ச் சொல்லி வருவார். அவர் தலை மாட்டில் சின்ன மேசை ஒன்றில் எனக்கு மட்டுமே வெளிச்சம் தரக்கூடிய மேசை விளக்கொளியில் எழுதிக்கொண்டே இருப்பேன். யாரேனும் உள்ளே வந்தால் 'எங்கிருந்து ஓசை வருகிறது. யார் பேசுகிறார்கள்' என்று வியப்பாக இருக்கும். அப்படி ஆடாமல், அசையாமல் படுத்துக்கொண்டே சொல்லி வருவார்.

'வாடாமலர்' எழுதத் தொடங்குமுன், ஆடிட்டர் சத்தியமூர்த்தி அவர்கள் குடுபத்தோடு என்னை மைசூரைச் சுற்றிப் பார்க்க ஒரு நாள் அனுப்பி விட்டார். இரவு வரும் போது தூங்கிவிட்டார். நாங்களும் உறங்கிவிட்டோம். மறுநாள் காலையில் படுக்கையைவிட்டு எழுந்ததும் அவரைக் காணச் சென்றேன். மரங்களடர்ந்த தோட்டத்தில் மெல்ல உலவிக் கொண்டிருந்தார். நான் குறுக்கே சென்று நின்றேன். அவரும் நின்றார். விழிகள் மட்டும் என்னைப் பார்ப்பன போலத் தோன்றின. ஆனால் அவர் என் எதிரே நின்றாரே ஒழிய என்னைப் பார்க்க வில்லை.

'அப்பா, அப்பா...' என்று அழைத்தேன் 'உம்...உம்' என்று பதில் ஒலி தந்தாரே ஒழிய என்னிடம் பேசவில்லை. முழுதும் மாறியிருந்தார். 'நேற்றுக் கலகல வென்று பேசி எங்களை மைசூருக்கு அனுப்பி வைத்தவர் இன்று பார்க்கவும் பேசவும் மாட்டேன் என்கிறாரே, என்ன தவறு செய்தோம்?' என்று வருந்தினேன்.

பிறகு சொன்னார்: "அந்த நேரங்களில் என்னைத் தொல்லை செய்யாதே! கண்முன் உள்ள மனிதரைவிட தாய், மகன், மனைவியைவிட புதினக் கதை மாந்தர்கள் என்னை மிக நெருங்கி ஆட்கொண்டு விடுகின்றனர். அப்போது கண்விழித்து நின்றாலும் முன்னே இருப்பவர் யார் என்று தெரிவதில்லை, காதிருந்தும் கேட்பதில்லை. வருத்தப்படாதே!" என்று ஆறுதல் சொன்னார்.

# 9. பிறர்பழி கேளார்—கூறார்!

ஒருநாள் என்ன நினைத்துக்கொண்டாரோ? "சௌரி... என்ன நான் செல்வம் சேர்க்கிறேன் என்று நினைக்கிறாயா?" என்று எதிர்பாராமல் ஒரு கேள்வி கேட்டார்.

பொதுவாகச் செல்வச் செருக்குக் குடும்ப நலத்தை, குழந்தைகள் மனத்தைக் கெடுப்பதைத் தொடக்கப்பள்ளி ஆசிரியன் என்ற முறையில் ஓரளவு உணர்ந்திருந்தேன். காந்தீய நினைவுகளில் ஆண்டுக்கு இரண்டே சட்டை, இரண்டே வேட்டி என்ற அளவில், அப்போது நான் வாழ்ந்த வாழ்வும் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

அவர் செல்வம் எவ்வளவு, செல்வாக்கு எந்த அளவு என்று ஒருநாள்கூட நான் நினைத்தது இல்லை. என் நண்பர் ஒருவர் 'மு. வ. எவ்வளவு இன்சியூரன்சு செய்துள்ளார்கள்?' என்று அடிக்கடி கேட்பார். எனக்கு அன்றும் தெரியாது; இன்றும் தெரியாது.

அவர் பேசுவார்; இரவு உறக்கம் வரும்வரை பேசுவார்; கேட்டுக்கொண்டே இருப்பேன். இடையிடையே ஓரிரு சொல் சொல்வேன்; கேட்பேன். அவ்வளவுதான்! எல்லாம் சமுதாயம், தமிழர் வாழ்வு, துன்பம், இறைமை பற்றியதாக இருக்கும். எப்போதாவது நண்பர் மாணவர் பற்றிப் பேச்சு நிகழும். ஆனால், ஒருநாள் கூடப் பிறர்பழி அவர் கூறி நான் கேட்டதில்லை. பேராசிரியர் தெ. பொ. மீ. க்கும், அவருக்கும் வேறுபாடு உண்டு என்று பலர் சொல்லிக் கொண்டிருந்த காலத்தில்கூட, "தெ. பொ. மீ. ஆழ்ந்த சிந்தனையாளர். இன்றுள்ள தமிழாசிரியர்களில் ஆங்கிலப் புலமையில் சிறந்தவர். எந்த நூலை எடுத்தாலும் விரைவில் கற்று—நினைவில் வைத்துத் தொகுத்துரைக்க, சாரத்தைக் கூறவல்லவர்" என்று அவர் ஒருமுறை தெ. பொ. மீ. பற்றிய பேச்சு எழுந்தபோது புகழ்ந்து கூறக் கேட்டிருக்கிறேன்.

ஒரு முறை சென்னை சென்றபோது, போன உடனேயே "சௌரி உனக்குத் தெரியுமா? அந்த ஆள் இந்த வயசிலே அந்த அம்மாவோட சுத்துறார். எப்படிப் பாத்தியா! எந்தப் புத்துலே எந்தப் பாம்பு இருக்குமோ?' என்று நான் அறிந்த ஒருவரைப் பற்றிக் கூறி அங்கலாய்த்துக் கொண்டார்கள் அம்மா. எனக்கும் மிகக் கவலையாக இருந்தது. 'அவரா' இப்படி நடந்து கொண்டார்? 'குழந்தை குட்டிக் காரராயிற்றே' என்றெல்லாம் எண்ணி வருந்தினேன்.

அப்போது 'வா! சௌரி எப்போது வந்தே' என்று கேட்டுக் கொண்டே அப்பா அறையிலிருந்து வெளியே வந்தார். தோட்டத்துப் பக்கம் போனார்கள். நான் பின் தொடர்ந்து கொண்டே அம்மா சொன்ன செய்தியைச் சொல்லி அவர் கருத்தை எதிர்பார்த்தேன். அவர் அதைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. என் குடும்பம் பற்றி, என் அம்மா பற்றி விசாரித்தார்கள். தென்னங்கன்று ஒன்றைக் காட்டி அதைச் சித்தூருக்கு எடுத்துக் கொண்டு போய் என் வீட்டுத் தோட்டத்தில் வைக்கும்படி சொன்னார்கள்.

இப்படிப் பிறர்பழி கூறவும் மாட்டார்; அன்றிக் கேட்கவும் மாட்டார். அவற்றுக்கு நாணும் நல்லொழுக்கம் அவர்பால் அமைந்திருந்தது. அப்படிப்பட்டவர் தன் செல்வம் பற்றிக் கேட்டதும், சிறிது தடுமாறி "ஆம்! அப்பா...செல்வமும் பயத்திற்கு உரியதுதான்"... என்று ஏதோ சொன்னேன்.

'இந்தச் செல்வம் நான் சென்னைக்கு வந்ததால் வந்தது. சென்னையில் புத்தகம் எழுதியதால் மட்டும் வந்து விடவில்லை. பாரி செல்லப்பனார், ஆடிட்டர் சத்திய மூர்த்தி அவர்கள், எனக்கு வரும் வருவாயைப் பலவாறு பெருக்கி வளர்த்து விட்டனர். பல சமயங்களில் பல தொழில்களில் பங்குதாரனாக இருக்குமாறு என்னை வற்புறுத்தினர். நான் மறுத்து விட்டேன். இல்லாவிட்டால் என்னை இன்னும் பணக்காரனாக ஆக்கியிருப்பர்.

"பணம் வேண்டும், உரிமையோடு எழுத, உணர்ந்ததை அஞ்சாமல் எழுத, ஒவ்வோர் எழுத்தாளனுக்கும் பணம் வேண்டும்" எங்கோ நோக்கியவாறு அழுத்தமாகப் பேசினார்கள். தான், தன் திருக்குறள் உரை நூலை முதலில் வெளியிட பட்ட பாட்டையெல்லாம் எடுத்துரைத்தார்.

"பாரி நல்லவர், உண்மையானவர். உன் நூல்களை எல்லாம் அவர் மூலமே வெளியீடு. பதிப்புரிமை உன்னிடம் வைத்துக்கொள். விற்பனை உரிமை அவருக்குக் கொடுத்து விடு" என்றார். அப்போது அவர் வார்த்தையில் அடங்கிய பொருள் ஆற்றல் எனக்கு விளங்கவில்லை. இப்போது எத்தனையோ எழுத்தாளர்கள் பதிப்பாளர்களிடம் தங்கள் எழுத்துரிமையை விற்றுவிட்டு, ஏழையாகிப் போவதைப் பார்க்கும்போதுதான் அவருடைய அநுபவ மொழிகளில் அடங்கிய கருத்துப் புலப்படுகிறது.

தன் செல்வ வளத்துக்கு இன்னொரு காரணமும் சொன்னார். அதுதான் அம்மாவின் குடும்பப்பாங்கு. ஒரு துளி பொருளையும் வீணடிக்காமல்—சிக்கனமாக—செம்மையாகக் குடும்பத்தை நடத்திச் சென்ற குடும்பப் பாங்கு—குழந்தைகளை வளர்த்த பாங்கு—பற்றிச் சொன்னார்கள்.

அப்பா அவர்கள் ஆண்டுதோறும் விடுமுறை நாட்களில் வெளியூர் சென்று விடுவார்கள். எந்தவிதக் குடும்பக் கவலையும் இன்றி எழுத்தில் ஈடுபட்டு விடுவார்கள். அப்போதெல்லாம் குடும்பத்தையும், குழந்தைகளையும், தந்தையாகவும் தாயாகவும் இருந்து காத்து வளர்த்த சிறப்பு அம்மாவுக்கு உண்டு. இன்னும் ஓர் சீர்மையையும் குறிப்பிட வேண்டும். அப்பா எழுத்து வாழ்வில் ஈடுபடும் போதெல்லாம் ஒரு துறவிபோல் வாழ்வார். பெங்களூர் உதகமண்டலம் முதலான குளிர்ந்த ஊர்களுக்குச் செல்வார். அப்போதெல்லாம் சென்னையின் கடுங்கோடையையும், தனிமையையும் தாங்கிக்கொண்டு, பல்லாண்டு மு.வ.வின் எழுத்துப் பணிக்கு ஒரு வகையில் உதவியவர்கள் என்ற சிறப்பும் அம்மாவுக்கு உண்டு.

# 10. பொதுவுடைமையில் பிடிப்புடைமை

ஒரு நாள் வீட்டில் யாரும் இல்லை; அப்பாவும் நானும் தான் இருந்தோம். 'இலை அறுத்துக் கொண்டுவா; சாப்பிடுவோம்' என்றார். நல்ல குருத்து வாழை இலை யாக அறுத்துக் கொண்டு வந்தேன்.

'அடடா! குருத்து இலையை அறுத்துட்டியே... முற்றிய இலை நிறைய இருக்கே. இரண்டு ஏடு அறுத்திருக் கலாமே. இலைதான் மரத்துக்கு வாய். குருத்து இலையால் நிறைய நீர் வெளியிட்டு மண்ணின் சத்தை நிறைய மரம் உறிஞ்ச முடியும்; சூரிய ஒளியை நிறையப் பெற்று மரத்துக்கு வழங்க முடியும். இனிமே குருத்தை அறுக்காதே. ஏன் குருத்தைப் பார்த்து அறுத்தே?' என்றார்.

'பட்டுப்போல வழவழன்னு இருக்குப்பா!... என்றேன். 'ஓ' பட்டுமேலே உனக்கு ஆசை இருக்கா... எத்தனை உயிர் களைக் கொன்றால் ஓர் ஆசை உருவாகும்?' என்றார். நாம் சும்மா அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். ''அம்மா பட்டுப்புடவை உடுத்துறாங்களே என்று பார்க் கிறியா? நான் உடுத்துவதில்லை. காந்தி அடிகள் கருத்துப் படி பருத்தி ஆடையே நல்லது. ஆனால் காந்தியின் அந்தக் கருத்தைக் கூறி என் மனைவியை வற்புறுத்த நான் விரும்பலே. பட்டுச் சேலை யாரும் உடுத்தக் கூடாது. பிறர் வருந்தும்படி, பொறாமைப் படும்படி தங்கநகைகள் அணிந்து கொள்ளக் கூடாதென்று சமுதாயச் சட்டத்தால் தான் இதனை மாற்றவேண்டும். பலர் பட்டுச்சேலைகளும் நகைகளும் அணிந்துகொண்டு விழாக்களில் கலந்து

கொள்ளும்போது என் மனைவியை மட்டும் வற்புறுத்திக் காந்தியத்தைப் பின்பற்றச் சொல்ல மாட்டேன்."

"அப்படித்தான் மார்க்சீயமும். நான் அதை விரும்புகிறேன். பின்பற்ற ஆசைப்படுகிறேன். எனக்கு வீடுகள் உள்ளன. சொத்து இருக்கிறது. அரசியலில் பொதுவுடைமை வாய்க்கும்போது, நான் முதல் ஆளாகச் சென்று என் சொத்துக்களை எல்லாம் அரசிடம் ஒப்படைத்து விடுவேன்" என்றார்.

# 11. படைப்பாளனைப் படைக்கும் படைப்பாளர்!

1970 க்கு முன் இதய நோயால் அவர் பதினைந்து நாள் ஓய்வு கொண்டிருந்த சமயம் அது. அப்போது அவருடன் இருந்தேன்.

"வேறு நூல் ஏதாவது எழுதவில்லையா?" என்று அவர் கேட்டார்.

''கள்ளிமலர், என்ற ஒரு புதினம் எழுதியிருக்கிறேன். சித்தூரில் வைத்திருக்கிறேன்'' என்று சொன்னேன்.

''இந்தவாரம் சித்தூர் சென்று வரும்போது எடுத்துக் கொண்டு வா'' என்றார்.

அப்படியே எடுத்துக் கொண்டு சென்றேன். ஒருநாள் இரவு 8-00 மணிக்கு மேல் கையெழுத்துப் படியைப் படிக்கச் சொன்னார், படித்தேன். இறுதிவரை உறங்காமல் கேட்டுக் கொண்டிருந்தார். படித்து முடித்ததும், "நன்றாக இருக்கிறது. படுத்துக் கொள், தூங்கலாம்" என்று உறங்கிப் போனார். நானும் தூங்கச் சென்றேன். காலையில் எழுந்ததும் பல் துலக்கிக் கொண்டே, தென்னை மரங் களுக்குத் தண்ணீர் பாய்வதைப் பார்த்துக் கொண்டே தொடர்ந்தேன். என்னவோ நினைத்துக் கொண்டு திடீரென்று நின்றார். என்னை ஏறிட்டுப் பார்த்தார்.

"அது சரி! செந்தில் வண்டியில் வந்து இறங்கினான் என்று எழுதியுள்ளாய். 'ஒற்றை மாட்டுவண்டி, இரட்டை மாட்டு வண்டி, குதிரை வண்டி, என்று இப்படி எழுதியிருந் தால் வடிவங்கள் மனதில் நிற்கும். நீ எழுதிய புதினத்தில் எந்த வடிவத்தையும் இப்போது என்னால்

காணமுடியவில்லை. செந்திலுடைய அம்மாவின் குணங்கள் நினைவுக்கு வருகின்றன. அந்த அம்மாவின் தோற்றம் மனத்தில் நிற்கவில்லை. இந்தக் குறையை நீக்கவேண்டும். இன்று மாலை அகிலன் வருவதாகச் சொல்லியுள்ளார். அவரிடம் முன்னுரை பெற்றுக்கொள். நான் ஒருவருக்கு நூலுக்குமேல் முன்னுரை தருவதில்லை. என்னிடமே ஒரு பெறுவது நல்லதும் இல்லை'' என்று கூறினார்.

அப்படியே அன்று மாலை அகிலன் அவரைக்காண வந்தார். அவர் உடல் நலம் பற்றி விசாரித்தார். அவருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். 'கள்ளிமலர்' அச்சாகும் போது முன்னுரை தந்து உதவும்படி கேட்டுக் கொண்டார். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு அகிலன் புறப்பட்டார். புறப்படும்போது என்னைக் குறிப்பாக உடன் வருமாறு அழைத்தார் அகிலன். நான் பின் தொடர்ந்து சென்றேன். 'மு. வ. அவர்கள் அவ்வப் போது சொல்லும் கருத்துக்களை அவர் வாழ்வில் நிகழும் அரிய நிகழ்ச்சிகளைக் குறித்து வைக்குமாறு' எனக்குக் கூறி விடை பெற்றுச் சென்றார்.

திரும்பி வந்தபோது சிரித்துக் கொண்டே, கையினாலே எதற்கு அகிலன் உடனழைத்தார் என்று கேட்டார். தலை குனிந்தபடியே அகிலன் கூறியதைக் கூறினேன். ''அதெல்லாம் வேண்டா'' என்று வாயினால் சொல்லி, உணர்ச்சி ததும்ப முகத்தினில் காட்டி, கைகளால் மறுத்தார். நான் 'எதுவும் நீங்கள் சொல்லாமல் எழுதி வைக்க மாட்டேன்' என்றேன்.

# 12. புகழ் வேண்டா; குறிக்கோளில் நில்!

1958 என்று நினைக்கிறேன், ஆனர்சு வகுப்பில் சேர்ந்த நேரம். ஒருநாள் மாலை பேச்சுப்போட்டி நிகழ்ந்தது. அதில் வெற்றி பெறுபவர்களில் முதல் இருவர் அந்த ஆண்டு பச்சையப்பன் கல்லூரி சார்பாகப் பல கல்லூரி பேச்சுப் போட்டிகளில் பங்குபெறச் செல்வர் என்று அறிந்தேன். 'போருக்கெல்லாம் காரணம் நாட்டுப்பற்று' என்ற தலைப்பு கொடுத்திருந்தார்கள். நானும் கலந்து கொண்டேன். ஐம்பது, அறுபது பேர் போட்டியிட்டனர். இரவு 11 மணி வரை போட்டி நிகழ்ந்தது. காந்தி ஆசிரமத்தில் பல சான்றோர்களின் பேச்சைக் கேட்டதனாலே, நல்ல நூல் பலவற்றை முறையாகக் கற்றதனாலே, மாலை நேரத்தில் வயல்வெளிகளில் அமர்ந்து சிந்திப்பதை ஒரு பழக்கமாக்கிக் கொண்டதனாலே அன்று நன்றாகவே என்னால் பேச முடிந்தது. போருக்கெல்லாம் காரணம் நாட்டுப் பற்றின்மையே; தன்னலப்பற்றே என்று குறிப்பிட்டு, மூவேந்தர்கள் பாரியை எதிர்த்த புறநானூற்றுப் பாடலையும், ஜூலியஸ் சீஸர், ஆக்டேவியஸ் சீஸர், அந்தோணி முதலியோர் வேற்று நாட்டோடு போரிட்ட சேக்ஸ்பியர் நாடக மேற்கோள்களையும் சுட்டிக்காட்டிப் பேசினேன். ஔவை நடராசனும் நானும் தேர்ந்தெடுக்கப் பெற்றோம். இது எதிர்பாராது எனக்குக் கிடைத்த வெற்றி. நீண்ட நேரம் போட்டி நிகழ்ந்ததாலும், எனக்கு வெற்றி கிட்டும் என்று யாரும் எண்ணாததாலும், என் மகிழ்ச்சியில் பங்குகொள்ள, பாராட்ட என் நண்பர்கள் யாரும் அங்கு இல்லை. காலம் கடந்துவிட்டதால் மு. வ. வீட்டிற்குச் செல்லவில்லை. அங்கேயே விடுதியில் படுத்துக்கொண்டேன். தூக்கம் வரவில்லை. மு.வ.விடம் சொல்லவேண்டும், அவர் பெரிதும் மகிழ்வார், பாராட்டுவார் என்று எண்ணி எப்பொழுது

பொழுது விடியுமெனக் காத்திருந்தேன். சரியாகக் காலை 6 மணிக்கெல்லாம் அவர் வீட்டுக்குப் போய்விட்டேன். விழித்தெழுந்து வந்த அவர், ""வா சௌரி" இரவு எங்கே போயிருந்தாய்?" என்று கேட்டுக்கொண்டே தோட்டத்துப் பின்புறம் சென்றார். நானும் அவரைப் பின்தொடர்ந்து சென்று, இரவு நீண்ட நேரம் நிகழ்ந்த போட்டியினையும் என் வெற்றியையும் மகிழ்ச்சியோடு கூறினேன். சட்டென்று நின்று திரும்பி என்னை வெறுப்போடு பார்த்தார். "உன்னை யார் கலந்து கொள்ளச் சொன்னது? என்னோடு பழகவேண்டும் என்றால், முதலில் இதை வேண்டாம் என்று சொல்லிவிடு. பல கல்லூரி களுக்குப் போகலாம், பாராட்டும் புகழும் பரிசும் கிடைக்கும், ஆனால் முதல் வகுப்புக் கிடைக்காது, இதற்காகவா நீ சிக்கலிலிருந்து வந்தாய்? படிக்கின்ற காலத்தில் படிப்பைத் தவிர இப்படிப் பொதுச் செயல்களை விரும்புபவர்களை நான் விரும்பமாட்டேன்" என்று பொறுப்போடு பார்த்துக் கூறினார். சோர்வோடு குளித்துவிட்டுத் தனிப் பாடங்கள் சொல்லிக் கொடுத்துவிட்டு, வீட்டுக்குச் சென்று சாப்பிட்டு விட்டுக் கல்லூரிக்கு வந்தேன். பேச்சுப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற, முதுகலை இறுதியாண்டு பயிலும் லெனின் என்பார் என்னை அங்குக் கண்டு, "இந்த ஆண்டு இறுதியாண்டு, அடுத்த ஆண்டு எனக்கு வாய்ப்பில்லை. நீங்கள் விட்டுக் கொடுத்தால் நான் பச்சையப்பன் கல்லூரி சார்பாக, ஔவை நடராசனோடு பல கல்லூரிகளுக்குச் சென்று பேசும் வாய்ப்பு ஏற்படும்" என்று சொல்லி, என் விடைக்காகத் தயங்கினார். பேராசிரியர் மு.வ. வெறுப்போடு பார்த்த முகமும், நண்பர் லெனின் ஏக்கத் தோடு கேட்ட முகமும் அவர் விருப்பத்திற்கு என்னை இணங்கச் செய்தன.

இப்படித்தான் அவர் எதை எடுத்தாலும் முழு ஈடுபாட்டோடு செய்வார். அவ்வாறான முழு ஈடுபாடு உடையவர்களைத்தாம் அவர் விரும்புவார். படிக்கவந்து

படிக்கின்ற நேரத்தில் விளையாட்டு என்றும், பற்பல போட்டிகள் என்றும் வகுப்புக்கு வராமல் போவது பெருங் குற்றம் என்று உணர்ந்தவர் அவர். அவர் ஒரு நாள்கூட வகுப்புக்கு வராமல் இருந்தது இல்லை. காலம் சிறிது தாழ்ந்தும் வந்தது இல்லை. அவரோடு அவர் வீட்டிலிருந்து புறப்பட்டுப் பச்சையப்பன் கல்லூரிக்குச் சென்றிருக்கிறேன். ஒருநாள் கூட, ஒரு நிமிடம்கூடக் காலங்கடந்து அவர் கல்லூரிக்குச் சென்றதில்லை. வகுப்புக்கு முறையாக வந்து விடுவார். கடைசி நிமிடம் வரை நடத்துவார். என்ன நடத்தவேண்டும்? எப்படி நடத்தவேண்டும்? எங்கிருந்து நடத்தவேண்டும்? என்பதை எண்ணிப் பார்த்துக்கொண்டு வருவார். சிறப்பு இலக்கியம் நற்றிணையை அவர் இரண்டு ஆண்டுகள் நடத்தினார். இடையிடையே காலாண்டு விடுமுறை, அரையாண்டு விடுமுறை, கோடை விடுமுறை என விடுமுறை பலவரும். ஆனால் வகுப்பு துவங்கும்போது, "எங்கே விட்டேன்? என்ன நடத்தினேன்?" என்று ஒரு போதும் அவர் மாணவர்களைக் கேட்டதில்லை. கோடை விடுமுறை கழிந்து எழுபது, எண்பது நாட்களுக்குப் பிறகு வகுப்பு துவங்கும்போது, என்னவோ ஒருமணி நேரத்திற்கு முன்பு விட்ட பாடத்தைத் தொடங்குவது போல நினைவு கூர்ந்து எங்களுக்கு நினைவுண்டாக்கி வகுப்பு நடத்துவார். பச்சையப்பன் கல்லூரியில் பல்லாண்டுகள் விடுமுறை (C.L.) எடுக்காமலேயே பணிசெய்த ஈடுபாடு உள்ள ஆசிரியர் அவர். அவரால் ஈடுபாடில்லாத மாணவனை விரும்ப இயலாது என்பது இயற்கைதானே!

# 13. புகழும் புறக்கணிப்பும்

அன்று விடுமுறை நாள், நானும் அப்பாவும் படித்துக் கொண்டிருந்தோம். காலை பத்து மணிக்கு மேல் இருக்கும். வீட்டின் முன் ஒரு கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். "'சௌரி, பகையைத் தேடிக்கொள்ளப் போகிறேன், நீ உள்ளே போ. இங்கிருந்தால் பிற்காலத்தில் உனக்கும் கேடுவரும். அண்ணியிடம் ஏதாவது பழம் எடுத்துக்கொண்டு வரச்சொல்'' என்று என்னை வேறோர் அறைக்கு அனுப்பிவிட்டு, வெளிக் கதவைத் திறந்துகொண்டு போய்க் காரில் இருந்து இறங்கியவர்களை உள்ளே அழைத்து வந்தார். பக்கத்து அறையில் இருந்த எனக்கு அவர்கள் பேசிய செய்திகள் கேட்டன.

யாரோ ஒருவர் மணிவிழாவுக்கு மு.வ.வைச் செயற் குழு உறுப்பினராக இருக்க வேண்டி வந்திருந்தார்கள். இவர் அதை மறுத்துக் கொண்டிருந்தார். விவாதம் சூடாகிக் கொண்டிருந்தது. "எனக்குக் கடமைகள் பல உள்ளன. போய் வாருங்கள்'' என்று அவர்களை அனுப்பிவிட்டு, நானிருந்த அறைக்கு மு.வ. வந்தார்.

"கொள்கையோடு வாழ விடமாட்டார்கள். மனிதனைப் புகழ்வதும் போற்றுவதும் நாத்திகம். புகழுக்கு அடுத்த தட்டில் பழி காத்திருக்கிறது. இந்தத் தமிழ்நாடு புகழ்ந்து புகழ்ந்தே பிறரையும் கெடுத்தது; தானும் கெட்டது. வந்தவர்கள் இருவரும் பத்திரிகையாசிரியர்கள். ஒருவருக்கு மணிவிழா எடுக்கப் போகிறார்களாம். செயற் குழுவில் நானிருக்க வேண்டும் என்று கேட்டார்கள். மறுத்துவிட்டேன். ஒவ்வொருவருக்கும் தனி உரிமை உண்டல்லவா? மக்களாட்சிக் காலமல்லவா? எனக்கென

ஓரிரு கொள்கைகள் வைத்திருக்கிறேன். என்னை விட்டு விடலாமல்லவா? திட்டிவிட்டுப் போகிறார்கள். இவர்களுக் கெல்லாம் அஞ்சப் போவதில்லை. பத்திரிகையில் ஏதாவது பழிகூறி எழுதுவார்கள். எழுதிவிட்டுப் போகட்டும்" என்றார் அப்பா.

அடுத்த வாரமே அவர்க்கொரு பத்திரிகை வந்தது. அது சிறுவர்களுக்குரியது. அதை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, "அன்றைக்கு வந்தார்களே, என்னைத் திட்டிவிட்டுச் சென்றார்களே, அவர்களுள் ஒருவர் வெளியிடும் பத்திரிகை இது. என்னைப் பற்றி ஏதாவது பழிகூறி எழுதியிருப்பார்கள், படித்துப்பார். ஏதாவது இருந்தால் சொல்" என்றார் அப்பா.

படித்துக்கொண்டே வந்தேன். வினாவிடைப் பகுதியில் பின்வருமாறு ஒரு வினா இருந்தது.

"எளிய வாழ்வு வாழும் மு.வ.வின் இரவு உணவு என்ன?"

என்பது அந்த வினா,

அதற்கு விடை:

"சுண்டக் காய்ச்சிய பாலாடையும் பாதாம்பருப்பும் தாம் அவர் இரவில் உண்பார்" என்பது.

இப்படிப் பொய்யான செய்தி கொடுத்து இளங் குழந்தைகள் நெஞ்சிலே தவறான கருத்துகளை உருவாக்கு வதை எண்ணி வருந்தி,

"அப்பா! அப்பா!" என்றழைத்தேன். "என்ன ஏதாவது செய்தி இருக்கிறதா?" எனக் கேட்டுச் சிரித்துக் கொண்டே வந்தார்.

"எனக்குத் தெரியாமல் என்னை விட்டுவிட்டுத் தினமும் இரவில் எப்போது நீங்கள் பாலாடையும் பாதாம்பருப்பும் உண்கிறீர்கள் அப்பா" என்று வருத்தத்தோடு கூறி, அந்தப்

பிரசுரிக்கப் பெற்ற பகுதியை அவர்க்குக் காட்டினேன். அதைப் படித்ததும் ஓரளவு உணர்ச்சி வயப்பட்டார்.

"இந்தக் காலம் எவ்வளவோ தேவலை சௌரி. அந்தக் காலத்தில் கொள்கைக்காகக் கொலையுண்டவர்கள் எவ்வளவோ பேர். ஏன்? நம் நாட்டு அரிச்சந்திரனையே எடுத்துக் கொள்ளேன். அரிச்சந்திரனுக்குக் கோயில் எங்கே இருக்கிறது தெரியுமா? சுடுகாட்டில் வைத்திருக்கிறோம். உண்மைக்கும் உண்மை சொல்பவர்க்கும் இந்த ஊரில் இடமில்லை அப்பா! இதுதானே எழுதியிருக்கின்றனர். போகட்டும். நான் என்ன உண்கிறேன் என்று உனக்குத் தெரியுமல்லவா?" என்றார்.

"தெரியும்பா" நான் மறுப்பெழுதுகிறேன்" என்றேன்.

"பைத்தியமே! மறுப்பினால், எதிர்ப்பினால் பொய்ம்மையின் ஆற்றல்தான் வளரும், உனக்கும் கேடு வரும். வேண்டாம். விட்டுவிடு. புறக்கணித்து விடுவோம்" என்றார் அப்பா.

# 14. தமிழுக்காக வாழ்ந்த தகையாளர்!

ஒரு நாள் காலையில் 'தினத்தந்தி' படித்துக் கொண்டிருந்தபோது அவர் முகத்தில் கவலை படிந்ததைப் பார்த்தேன். அன்று காலையிலிருந்து அவர் மிகவும் வாடி இருந்தார். படபடப்பாக இருந்தார். இன்னதென்று அறியாமல் நாய்க்குட்டி போல அவர் நிற்கும்போது நின்று, இருக்கும்போது அமர்ந்து, அன்று முழுதும் நானும் உடனிருந்தேன். மாலையில் வீட்டிற்கு உணவுண்ணச் செல்லும்போது "சீக்கிரம் வந்துவிடு, ஒரு கட்டுரை எழுத வேண்டும்" என்று சொன்னார்.

விரைந்து உண்டுவிட்டு, மாடியில் எனக்குத் தந்திருந்த அறையில், மேசையில் ஒரு கட்டு காகிதத்தை வைத்துக் கொண்டு, பேனா நிறைய இங்க்கைப் போட்டுக்கொண்டு தயாராக எழுதுவதற்கு இருந்தேன். எட்டு மணியிருக்கும்; மாடிக்கு வந்தார். மெல்ல மாடியில் நடந்து கொண்டே அன்றிருந்த தமிழன் பெருமையும், இலங்கையில் அவன் பெற்ற துன்பமும், இழிவும் குறித்து நீண்டநேரம் சொன்னார்கள். முப்பத்திரண்டு பக்கங்கள் என்று நினைக்கிறேன். 'கள்ளத் தோணி' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை உருவாயிற்று. அதன் பிறகுதான் இலங்கை அரசு 'கள்ளத்தோணி' என்ற பெயரில் தமிழர் சில்லரை நாடு கடத்தியது என்ற 'தினத்தந்தி' செய்தி அவருள்ளத்தை நாள்முழுதும் வாட்டி வதைத்தது எனக்குப் புலனாயிற்று.

தென் மாநிலங்கள் நான்கினையும் ஒன்றாக அமைக்கும் சிந்தனை ஒன்று, மத்திய அரசுக்கு வந்தபோது அதை வன்மையாக மறுத்தார். 'மண்குடிசை'யில் இடம் பெறுகின்ற கதைத் தலைவன், காகிதத் துண்டுகளை

அச்சிட்டு, மறைமுகமாக ஊரெல்லாம் வழங்கியது போல, இவரும், அந்தக் கருத்துக்கு மாறாகத் தமிழர்கள் விழிப்புணர்ச்சியோடு 'அதை மறுக்க வேண்டும்' என்ற எண்ணத்தோடு துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து சென்னைப் பேருந்து நிலையங்களில், இரயில் நிலையங் களில் எல்லாம் கட்டுக்கட்டாக வைக்கச் சொன்னார். நான்கு மாநிலங்களின் ஒருங்கமைப்புக் கொள்கையை எதிர்த்துச் செயல்பட்டுக் கொண்டிருந்த திருவாளர் ம.பொ.சி. அவர்களுக்கு, அவர் செயல் முறைக்கு உதவும் வகையில் பணம் கொடுத்து உதவினார். தான், தேவை யெனில் ஆசிரியர் பணியைத் துறக்கவும் தயாராக இருந்தார்.

தனக்கு மத்திய அரசு வழங்கிய விருதை, இந்திப் போராட்டத்தில் தமிழக மாணவர்கள் சுடப்பட்டதை நேஞ்சில் கொண்டு மறுத்துவிட்டார்.

தமிழ்ச் சான்றோர் திரு.வி.வின்பால் கொண்ட ஈடுபாட்டால்' [மாதுளை மரமொன்றை வெட்ட மறுத்த நிகழ்ச்சி ஒன்றும் இங்கு நினைவுக்கு வருகிறது.

"காய்க்கிற காய்களையெல்லாம் அணில் தின்னுட்டுப் போயிடுது. ஒரு பயனும் இல்ல. இத வெட்டனாதான் புது வீட்டையும், நம்ம இந்தப் பழ வீட்டையும் இணைச்சிக் கட்டலாம்னு மேஸ்திரி சொல்லிட்டுப் போய்ட்டாரு. நீங்க வெட்ட வேண்டாம், வெட்ட வேண்டாம் என்கிறீங்க. எப்படியோ போங்க, எனக்கென்ன?" என்று அம்மா அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

அனைத்தையும் கேட்டுக்கொண்டு ஒன்றும் பதில் பேசாமல் அப்பா கல்லூரிக்குப் புறப்பட்டார்கள். நானும் தொடர்ந்தேன். வழியில், "வெட்டுனா என்னப்பா, அம்மா வருத்தப்படறாங்களே?" என்று சொல்லி நிறுத்தினேன்.

"அது பற்றி உனக்குத் தெரியாது. அந்த மரத்தைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குத் திரு.வி.க. நினைவு வரும். ஒருநாள் இந்த வீடு கட்டி அவர் இங்கு வந்திருந்த போது தின்று துப்பிய மாதுளை விதையில் முளைத்த மரம் இது. அதனால்தான் தயங்குகிறேன்" என்றார்.

இப்படித் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்ச் சான்றோர்பால் அவர் வைத்திருந்த அன்பைப் பலமுறை கண்டு வியந்திருக்கிறேன்.

# 15. துறவி மு. வ.

"என் திருமணம் நிகழ்ந்த பின் ஒருநாள் மனைவியோடு திருப்பத்தூர் ஆசிரமத்துக்குப் போனேன். அங்கிருந்து தொண்டாற்றிய கிறித்துவத் துறவியார் என் மதிப்புக்கு உரிய சான்றோர்; என் எளிய வாழ்வுக்கு, அகந்தையற்ற அறிவுத் தெளிவுக்குக் காரணமானவர். அவர் என் மனைவியைப் பார்த்து, 'அம்மா எங்களவரை உங்களவர் ஆக்கிக் கொண்டாய் அம்மா! உன் மேல் எனக்குக் கோபந்தான்' என்றார். "திரு. மு. வ. அவர்களும் தம்மைப்போல் ஒரு துறவி ஆக வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டவர்; துறவி ஆவார் என்றும் எதிர்பார்த்தவர்" என்று தன்னைப் பற்றி டாக்டர் மு. வ. இரண்டு மூன்று முறை என்னிடம் கூறியுள்ளார். திரு. மு. வ. வும் இளமையில் அப்படி நினைத்தது உண்டாம். சிறுவனாக வாழ்ந்த காலத்தில் வாலாஜாவுக்கு அருகில் வேலம் மலையடிவாரத்தில், தனியே தாயுமானவரையும், மாணிக்கவாசகரையும் பாடிக் கசிந்து உருகிய போது, அப்படி ஓர் எண்ணம் அவரையும் ஆட்கொண்டிருந்தது.

ஆறேழு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் உடல்நலம் மிகவும் கெட்டது. இதயத் துடிப்பின் சீரும் ஓரளவு சிதைந்தது. அப்போது இயற்கை மருத்துவத்தாலேயே அக் குறையைச் சரிசெய்து கொண்டார். அப்போதிருந்து சில ஆண்டுகள் உப்பையும் உறைப்பையும் அறவேவிட்டுவிட்டார். காலையில் உப்பில்லாச் சப்பாத்தியையும், உப்பு உறைப்பு ஒன்றுமின்றி அவித்த காய்களையும் உண்பதே அவருக்கு வழக்கமாகிவிட்டது. அவர்முன் அமர்ந்து அவரோடு உண்ணும் வாய்ப்பு சிலபோது எனக்கு வாய்க்கும். இட்டிலியும், சாம்பாரும், முறுக்கும், வடையும் தின்று கொண்டிருக்கும் நான் உப்புசப்பற்ற உணவு உண்ணும் அவரைத் துயரோடு

பார்ப்பேன். நான் உண்பனவற்றில் தீது குறைந்தது ஏதேனும் இருந்தால் தருவேன். நான் அப்படித் தந்தபோது ஒருநாள் சிரித்துக்கொண்டே "உடம்பும் மிகை உடம்பும் மிகை" என்று இரண்டாம் முறை 'உம்மைக்கு' அழுத்தம் கொடுத்துக் கூறினார்.

இன்னொரு நாள் அவர் அவ்வாறு உண்ணும்போது நான் அருகில் இருந்தேன். நீண்டநேரம் சப்பாத்தியையும் காய்களையும் மென்று மென்று சுவைத்துக்கொண்டே, "உப்பும் உறைப்பும் இல்லாத போதுதான் உண்மையான சுவை தெரிகிறது...உண்மை விளங்குகிறது" என்று கூறிச் சிரித்தார். 'ஆம்! அகங்காரமும் மமகாரமும்—யான் எனது என்னும் செருக்கு இல்லாதபோதுதான் உண்மை தெரிகிறது என்று எண்ணியவாறு நானும் சிரித்தேன்.

மகரிஷிகள், 'நான் நீ' அற்ற அந்தப் பெருநிலையி லிருந்து சிறிது இறங்கிக் கீழே வந்தபோது கவிஞர்கள் ஆகிறார்கள். வால்மீகி மகரிஷி அன்றில் பேடையின் ஆறாத் துயர் கண்டு, மனிதனைப்போல் கலங்கிய போதே, ஆதிகாவியமாகிய இராமாயணத்தின் முதல் சுலோகம் அவர் திருவாயில் அரும்பியது. 'நான் நீ' அற்றவர்கள் கவிஞன் ஆவதற்காக, எழுத்தாளன் நிலையடைவதற்காக எவ்வாறு சிறிது கீழே இறங்கி வர வேண்டி உள்ளதோ அவ்வாறே 'நான் நீ' என்ற இரு கண்ணிகளால் ஆகிய இந்தச் சின்னக் குடும்ப வாழ்வில் சிக்கிச் சிதைபவர்களும், அந்தக் கண்ணி களைக் கடந்து, அகண்ட பெரிய உலகையும், ஆண்டவன் படைப்பின் திட்ப நுட்பங்களையும், அதிலியங்கும் உயிரோட் டத்தின் நெளிவு சுழிவுகளையும் கண்டு நெகிழ்ந்து பிறர்க்குக் காட்ட ஓரளவு மேல்நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. குடும்பத்தைக் கடந்து பார்க்க வேண்டியுள்ளது; அன்றாட வயிற்றுக் கடமைகளை தன் வாழ்வுக் கடமைகளை மறந்து நினைக்க வேண்டியுள்ளது. நீண்ட நாவல் எழுத வேண்டும் போது பல நாட்கள் அக்கடமைகளைத் துறந்து வாழ வேண்டியுள்ளது. பெரும்பாலும் நாவல் எழுதிய நாளில்

எல்லாம் திரு. மு.வ. அகத்தில் மட்டுமன்றிப் புறத்திலும் துறவியாகவே வாழ்ந்தார் எனலாம்.

'அகல் விளக்கு,' 'வாடாமலர்' எழுதிய நாளில் நான் உடனிருந்தேன். 'வாடாமலர்' அவர் கூற நான் எழுதும் பேறு பெற்றேன். அந்த நாவலை பெங்களூரில் எழுதினோம். முதல் மூன்று நான்கு நாட்கள் என்னைக் கப்பன் பூங்கா, மைசூர் பிருந்தாவனம் முதலிய இடங்களைப் பார்த்துவர அனுப்பி விட்டார். இப்படிப் பல இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தபின் நான் கண்ட எழுத்தாளர் மு.வ. வேறு ஒருவராகக் காணப்பட்டார். பற்றற்ற துறவியாகக் காணப்பட்டார். தன்னுள்ளே தான் ஆழ்ந்திருந்தார்.

இப்படி ஆழ்ந்துவிடும் நிலை அவர்க்கு அப்போதே இயல்பாகிவிட்டது. வளம் வாய்ந்த பிற்காலத்தில் இப்படி மாணவர் ஒருவர் துணையோடு உடல் நலத்துக்கும் மனவளத்துக்கும் உகந்த பெங்களூரில் தனித்து ஓரிரு மாதங் கள் வாழும் துறவு வாழ்க்கையை நான் கண்டேன். அப்படி வளம் வாய்க்காத அந்த இளமை நாட்களிலே வேலத்திலோ அல்லது வேறோரு எளிய கிராமத்தில் எங்கோ ஒரு மூலையில் தாமே சமைத்துக்கொண்டு, கோடை வெப்பத்தை சகித்தவாறு மண்ணெண்ணெய் விளக்கு ஒளியில் இரவெல்லாம் எழுதிக் குவித்த அந்தத் துறவி மு. வ. வை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

எல்லாம் பெற்று நிறைவு பெறாதது நெஞ்சம். பணம், பட்டம், பதவி கிடைத்த பின்பும் புகழுக்காக அது அலை கிறது. வயிறு நிறைந்த பிறகும் வாழ்வு நிறைந்த பின்பும் மனிதனை அது ஆட்டிப்படைக்கிறது. சாதாரண மனிதனை அந்தப் புகழ் தின்னுகிறது. சான்றோனையும் அது மயக்கு கிறது. அந்தத் தின்னும் புகழும் திகைக்க வைக்கும் புகழும் தன்னைப் பற்றாமல் விழிப்பாக இருந்தார் திரு. மு. வ. அவரைத் தேடிவந்த பட்டம் பல; எல்லாம் தலை சிறந்தன; பலகோடி மக்களுள் ஓரிருவரே அடையத்

தக்கன. பட்டம் பதவி என்னும் இந்தச் சித்திகள் கண்டு அந்தத் துறவி மயங்கிவிடவில்லை. பட்டம் பதவிகள் வாய்த்த போது காதல் உறாது இராமன் போலக் கடமை உணர்ந்து பணியாற்றினார். அவற்றால் வரும் புகழை அவர் மதித்த தில்லை; பாராட்டிக் கொள்ளவும் இல்லை; பிறரைப் பாராட்ட விட்டதும் இல்லை.

புகழ்பற்றிய எண்ணம் இன்னும் ஆழமாக அவர் மனத்தில் பதிந்திருந்தது. தான் புகழை மதியாமையோடு புகழ்வாய்ந்த பலரிடம் தான் மயங்காமலும் சாதாரண எளியவரை இகழாமலும் அவர் வாழ்ந்ததற்கு அந்த எண்ணமே காரணமாக இருந்தது. அவரிடம் பணிபுரிந்த கடை நிலை ஊழியர்களையும் சம நோக்குடனே கண்டு மதித்து வந்தார். "பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்ற கணியன் பூங்குன்றனார் பாடலுக்கு அவர் எடுத்துக் காட்டாக அமைந்தார்.

இன்னும் ஒருவகையிலும் இதனைப் பார்க்கலாம். தன் வீரத்தால், வெற்றியால், ஆற்றலால், அறிவால், அன்பால், பண்பால் இயல்பாகவே புகழ் வராவிட்டாலும் கொடையால் புகழ் வரும் வாய்ப்பு ஒன்றும் உண்டு. புகழை வெறுத்த அவர் கொடையை மறுக்கவில்லை. தகுதியறிந்து, தேவை உணர்ந்து, வருந்துங்காலம் கருதி அவர் எண்ணற்ற இளைஞர்க்கு உதவியிருக்கிறார், அவர் வலது கை கொடுப்பதை இடது கை அறியாது. மனைவி அறியார்; மக்கள் அறியார். மாணவர் ஒருவருக்கு அவர் வழங்குவதை அந்த மாணவரோடு உடன்வாழும் நண்பரும் அறியார். அன்றியும் ஏதேனும் வழங்கும்போது, 'யாரிடமும் சொல்லாதே; எனக்கு நீ செய்ய வேண்டிய உதவி இதுதான்' என்ற வேண்டுகோளோடு வழங்குவார். மண், பொன், பெண் ஆசைகளை விட ஆற்றல் வாய்ந்த அந்தப் புகழ் ஆசையின் நிலையாமை தெளிந்து துறந்தவர் அவர்.

அவர் தனிமையை விரும்பினார். இறுதி நாட்களில் ஓய்வை விழைந்தார். அதன் காரணத்தை அவர் 7-12-1972 எழுதிய கடிதத்தின் பின்வரும் வரிகள் விளக்கும். "உழைத்தேன்; போதும், ஓய்வு பெற உரிமை உண்டு. ஓய்வும் அன்று. எழுத்து வகையில் உழைப்பு இயன்றது செய்வேன். எனக்குத் தனிமை மிக வேண்டும். அதுவே என் விழைவு. ஏனெனில் இறைவனுடன் நிரம்பப் பேச முடிகிறது."

அந்தத் துணைவேந்தர்க்குப் பற்பல தொண்டர்கள். அந்த ஆசிரியருக்கு ஆயிரம் ஆயிரம் மாணவர்கள். அந்த எழுத்தாளர்க்கு நூறாயிரம் வாசகர்கள். அந்த மனிதர்க்குப் பலகோடி நண்பர்கள். ஆனால் அந்தத் துறவிக்கு ஓரிரு சிஷ்யர்களே! அவருள் யானும் ஒருவன் போலும். இப்போது, அவர் மறைந்த பிறகு அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது.

ஏறக்குறைய இருபதாண்டுகள் அவரோடு பழகி வந்தேன். சிற்சில பேசுவோம். பெரும்பாலும் தாயுமானவர், மாணிக்கவாசகர், இராமதீர்த்தர், காந்தி அடிகள் முதலியோரைப் பற்றிப் படரும் எண்ணங்கள். ஒவ்வொரு சொல்லிலும் தாம் கண்ட உண்மைகளை அவர் கூறுவார். நா தழுதழுக்க கண்ணீர் ததும்ப அவர் பாடக் கேட்பேன். இறுதிச் சந்திப்பும் அப்படித்தான் அமைந்தது.

1974 அக்டோபர் 8-ம் தேதி புதன்கிழமை இரவு அவரை அரசினர் மருத்துவ விடுதியில் சந்தித்தேன். இதய நோயாளி அறையில் படுத்திருந்தார். கண்டாரை மருட்டும் நுண் மருத்துவக் கருவிகள் பல அவரைச் சுற்றி இருந்தன. ஆனால் அவர் மட்டும் நோயாளியாக இல்லை. தம் நோய் குறித்து ஒன்றும் சொல்லவில்லை. தம் உடலையே கருவியாகக் காட்டி எனக்கு அவர் அருளிய கடைசி போதனை இதுதான். இதயத் துடிப்பை ஒரு கருவி நீலமின் ஒளியால் துடித்துத் துடித்துக் காட்டிக் கொண்டிருந்தது. "அதைப் பார். ஆடலைக் காட்டி என்

உடலழித் தாண்டு கொண்டான் ஆடும் ஆடலைப் பார்" என்று சொன்னார். "அப்பா! ஒன்றும் பேசவேண்டாம்...... பேசக்கூடாது......" என்றேன்.

சாய்ந்து படுத்துக்கொண்டு கண்மூடிப் புன்னகை செய்தார். சிறிது நேரத்தில் மீண்டும் விழித்துக் கொண்டார். சிறிது நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். "ஊனை நாடகம் செய்துவித்தவா, உருகி எந்தனைப் பருகுவித்தவா" என்ற மாணிக்கவாசகர் திருச்சதகப் பாடலின் அடிகளை அவர் மெல்லப் பாடினார். நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அதுதான் அவர் எனக்குச் செய்த இறுதி போதனை! முதன்முதலில் அவர் எனக்குச் சுட்டிக் காட்டிய போதனையும் அதுவே!

அமைதியான வேலத்தில், எங்கோ ஒரு மூலையில் துவங்கிப் பரபரப்பான சென்னையில் படாடோபமான மருத்துவ நிலையத்தில் அவர் மறைந்தாலும் அந்தத் துறவி வாழ்வு தாயுமானவர், மாணிக்கவாசகர் நினைவிலேயே துவங்கி அதிலேயே முடிந்தது. அவர் எனக்குக் காட்டிக் கொடுத்ததும் அதுவே!

—'மேம்பாலம்'
பிப்ரவரி 1975

—



டாக்டர் மு. வரதராசனாரும் டாக்டர் பொன் சவுரிராசனும்